திருமண வரன், திருமணம், குடும்ப விஷயங்கள் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் கூற்றுகள் பக்கம் 3

ஹுஸூர் அவர்களின் கட்டளைகளின் ஒளியில் சமூக வலைதளங்களை சரியான முறையில் பயன்படுத்துவதும் அதன் பயன்களும் (தொடர்ச்சி...) பக்கம் 8

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) தொடர்–7 பக்கம் 13

அணு ஆயுதப் போரின் அச்சுறுத்தல் பக்கம் 21



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

**Nubuwwat Vazhi | April 2026 | Vol. 5 - Issue No. 5**
**Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005**
**Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311**






# திருக்குர்ஆன்

وَالَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا
وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ
اِمَامًا

மேலும் அவர்கள் எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக! மேலும் எங்களை இறையச்சம் உடையவர்களுக்கு இமாமாக (தலைவராக) ஆக்குவாயாக! என்று வேண்டுவார்கள். (25:75)



# ஹதீஸ்

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو،
أَنَّ رَسُولَ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ قَالَ
" إِنَّمَا الدُّنْيَا مَتَاعٌ وَلَيْسَ مِنْ مَتَاعِ الدُّنْيَا
شَىْءٌ أَفْضَلَ مِنَ الْمَرْأَةِ الصَّالِحَةِ "

அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இவ்வுலகம் தற்காலிக வாழ்வாதாரத்திற்கான பொருள்களைக் கொண்ட ஓர் இடமே ஆகும். அவற்றுள் மிகச் சிறந்தது ஒரு நற்குணமுள்ள மனைவியே ஆவாள்.

(இப்னு மாஜா – ஹதீஸ் எண். 1855)

# திருமண வரன், திருமணம், குடும்ப விஷயங்கள் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் கூற்றுகள்

★ ★ ★ முஸஃப்பர் அஹ்மத் நாஸிர் (நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத், காதியான்) ★ ★ ★

தமிழாக்கம்: மவ்லவி M. ஷாஜஹான்

وَمِنۡ اٰیٰتِہٖۤ اَنۡ خَلَقَ لَکُمۡ مِّنۡ اَنۡفُسِکُمۡ اَزۡوَاجًا لِّتَسۡکُنُوۡۤا اِلَیۡہَا وَجَعَلَ بَیۡنَکُمۡ
مَّوَدَّۃً وَّرَحۡمَۃً ؕ اِنَّ فِیۡ ذٰلِکَ لَاٰیٰتٍ لِّقَوۡمٍ یَّتَفَکَّرُوۡنَ

பொருள்: அவனுடைய அடையாளங்களில் ஒன்று, அவன் உங்களிலிருந்தே, உங்களுக்காக துணைவர்களை, நீங்கள் அவர்களிடத்து மன அமைதி பெறுவதற்காகப் படைத்து, உங்களுக்கிடையே அன்பையும், கனிவையும் அவன் ஏற்படுத்தியதாகும். சிந்திக்கும் சமுதாயத்தினருக்கு நிச்சயமாக இதில் அடையாளங்கள் உள்ளன. (30:22)

ہُنَّ لِبَاسٌ لَّکُمۡ وَاَنۡتُمۡ لِبَاسٌ لَّہُنَّ ؕ

அவர்கள் உங்களுக்கு ஒரு வகையான ஆடையாக -வும், நீங்கள் அவர்களுக்கு ஒரு வகையான ஆடையாகவும் உள்ளீர்கள். அதாவது ஒருவர் மற்றவரின் குறையை மறைப்பது இரு தரப்பினரின் பொறுப்பாகும். (2:188)

திருமண வாழ்க்கை என்பது அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் வெகுமதியாகும். மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சியை மதிப்பதே இதன் நோக்கமாகும்.

## நிக்காஹ் மற்றும் திருமணத்தின் நோக்கம்

அல்லாஹ் திருமணம் மற்றும் நிக்காஹ்வை மனித சந்ததி நிலைபெறுவதற்கான ஒரு வழிமுறையாக ஆக்கி -யுள்ளான். அதில் இரண்டு குடும்பங்கள் ஒன்றிணைகிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருமணத்தை தனது வழிமுறை எனக் கூறியுள்ளார்கள். இது சமூகத்திற்காக சந்ததிக்காக மட்டுமல்ல. மாறாக பல தீமைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு முக்கிய கட்டளையாகும். முஸ்லிம் ஒருவரது வீட்டில் திருமணம் நடக்கும்போது, அது உலக நிம்மதிக்காக என்று அல்லாமல் இறைவனுடைய கட்டளையைப் பேண வேண்டும். அதன்படி செயல்பட வேண்டும். திருமணம் என்பது இருவருக்கு இடையேயான ஓர் உலக ஒப்பந்தம் மட்டுமல்ல. மாறாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கான ஒப்பந்தமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மனித உளவியலில் மிக ஆழமான ஞானம் கொண்டிருந்தார்கள். சிறந்த நிபுணர்களால் கூட அவரை நெருங்க முடியவில்லை. இந்த உளவியலை மனதில் கொண்டு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருமணத்தின்போது ஓதுவதற்காகத் தேர்ந்தெடுத்த சில வசனங்களில், சரியான பேச்சு, இறையச்சம், இரத்த உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் மறுமைக்கு நீங்கள் என்ன அனுப்பியுள்ளீர்கள் என்று



பாருங்கள் என்பதன் பக்கமும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே, புதிதாக நிறுவப்பட்ட உறவுகளில், இரு தரப்பு நெருங்கிய உறவினர்களான தாய், தந்தை, சகோதரன், சகோதரி போன்றவர்களின் இடையே இந்த விஷயங்கள் இருக்கும் என்றால் பிறகு இரு குடும்பங்களுக்கும் வலியை ஏற்படுத்தக்கூடிய, உறவுகளில் கசப்பை ஏற்படுத்தக்கூடிய, உறவுகளை முறிக்க வழிவகுக்கக்கூடிய பிரச்சினைகள் ஒருபோதும் உருவாகாது.

திருமணத்தைப் பற்றிய இஸ்லாமிய போதனைகள் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக் -கின்றன. அல்லாஹ்வின் கட்டளைகளையும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் முன்மாதிரியையும் புறக்கணிப்பதன் விளைவாக, திருமணத்தில் பிரச்சினைகள் எழுகின்றன. இது போன்ற பிரச்சினைகள் எழும்போது, அதற்கான தீர்வு நம் முன் உள்ளது. அது திருக்குர்ஆனின் போதனையும் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியையும் பின்பற்றுவதாகும். இதன் மூலம் திருமணம் மற்றும் குடும்பப் பிரச்சினைகளை நீக்கி மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையைப் பெற முடியும்.

## குடும்ப வாழ்க்கையில் எழும் பிரச்சனைகளும் அவற்றின் காரணங்களும்

திருமண வாழ்க்கையில் கசப்பு ஏற்படுவதற்கான சில காரணங்கள்:

மனைவிகளைக் குறை கூறுதல் மற்றும் மோசமாக நடத்துதல். ஆண்களின் நடவடிக்கை, பேராசை மற்றும் வெட்கமின்மை, நியாயமற்ற கோரிக்கைகள். விருப்பமில்லா

திருமணங்கள், சகிப்புத்தன்மையின் குறைவு, பொய்களின் காரணமாக நம்பிக்கையின்மை, மனநிறைவு மற்றும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இல்லாமை, பெண்களின் நியாயமற்ற ஆசைகள் மற்றும் கோரிக்கைகள், தைரியம் மற்றும் நன்றியுணர்வு இல்லாமை, இதுபோன்ற விஷயங்கள் திருமண வாழ்க்கையில் கசப்பை உருவாக்கும். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது குத்பாக்களிலும் உரைகளிலும் குடும்ப வாழ்க்கையில் எழும் இத்தகைய பிரச்சனைகளையும் அவற்றின் காரணங்களையும் தெளிவாக விளக்கியுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை எடுத்துரைக்கிறேன்.

## உறவுகளில் கசப்பு ஏற்படுவதற்கான சில காரணங்கள்:

### கூட்டுக் குடும்ப அமைப்பு:

கூட்டுக் குடும்ப அமைப்பின் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரிக்கும்போது, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு இவ்வாறு அறிவுரை கூறினார்கள்:

வீடுகளில் தொடர்ந்து சண்டைகள் மற்றும் அமைதி இன்மையை ஏற்படுத்தும் ஒரு நோய் என்னவென்றால், திருமணத்திற்குப் பிறகு ஆண் பிள்ளைகள் வசதிவாய்ப்பு இருந்த போதிலும், எந்த நியாயமான காரணமும் இல்லாமல், தங்கள் பெற்றோர் மற்றும் உடன்பிறந்தவர்களுடன் வீட்டில் தொடர்ந்து வாழ்கிறார்கள். பெற்றோர் வயதானவர்களாக இருந்தால், அவர்களுக்கு சேவை செய்ய யாரும் இல்லை; சொந்தமாக வேலை செய்ய முடியாது; உதவியாளர்கள் இல்லை என்றால், அவர்களை தன்னுடன் வைத்து அவர்களுக்கு சேவை செய்வது மகன்களுக்கு அவசியம் மற்றும் கடமையாகும். ஆனால் உடன்பிறந்தவர்கள் ஒன்றாக வாழ்கிறார்கள் என்றால், வீட்டைப் பிரிப்பதில் எந்தத் தீங்கும் இல்லை. இப்போதெல்லாம், இதன் காரணமாக பல தீமைகள் எழுகின்றன. ஒன்றாக வாழ்வதன் மூலம் நாம் அதிக பாவங்களில் விழுந்தால், அது ஒரு சேவையோ அல்லது நன்மையோ அல்ல..... நம் பெற்றோரிடமிருந்து பிரிந்தால், நாம் எத்தனை பெரிய பாவங்களைச் செய்தவராகி விடுவோம் என்று மக்கள் நினைக்கிறார்கள். மேலும் சில பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை இந்த வழியில் பயமுறுத்துகிறார்கள். மேலும் அவர்கள் பிரிந்தவுடன், அவர்களுக்கு நரகம் கடமையாகி விடும் என்று கூறி அவர்களை மிரட்டுகிறார்கள். எனவே இது மிகவும் தவறான அணுகுமுறை ஆகும்..... நான் சில பெண்களிடம் பலமுறை கேட்டிருக்கிறேன். அவர்களின் மாமியார் மாமனார் முன், நாங்கள் எங்கள் சொந்த விருப்பப்படி வாழ்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்களின் பிள்ளைகளும் அதையே சொல்கிறார்கள். ஆனால் தனித்தனியாகக் கேட்டால், இருவரும் ஒரே பதிலைச் சொல்கிறார்கள். அதாவது அவர்கள் கட்டாயத்தின் காரணமாக (கூட்டுக் குடும்பத்தில்) வாழ்கிறார்கள். இறுதி விளைவு, சில நேரங்களில் மருமகள் மாமியாரின் மீது அநீதியிழைக்கிறாள். சில சமயங்களில் மாமியார் மருமகளின் மீது அநீதியிழைக்கிறாள்." (குடும்பப் பிரச்சினைகள் மற்றும் அதன் தீர்வு பக்கம் 77-79)

### விருப்பமில்லாத திருமணங்களும் குடும்பப் பிரச்சினைகளுக்கு ஒரு காரணமாகிறது:

சில கட்டாயத் திருமணங்களில், பிறகு நடக்கும் நிகழ்வுகள் கசப்புக்கு வழிவகுக்கும். இது தொடர்பாக, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

சில பெண்கள் தங்கள் பெற்றோரின் ஆலோசனையின் பேரில் திருமணம் செய்து கொள்கிறார்கள். முதலில், உண்மையைப் பேசவும் உண்மையைச் சொல்லவும் அவர்களுக்கு தைரியம் இருக்காது. சில நேரங்களில், திருமணத்திற்குப் பிறகு, பெண்கள் இந்த உறவு பிடிக்கவில்லை என்று கூறுகிறார்கள். அவர்களின் பெற்றோர்கள் கட்டாயப்படுத்தியதாகச் சொன்னார்கள். சில பையன்களும் கூட திருமணத்திற்குப் பிறகு சொல்கிறார்கள். ஆண்களுக்கும் அந்த தைரியம் இருப்பதில்லை. அல்லது பையன் அல்லது பெண் வேறு எங்காவது சம்பந்தப் -பட்டிருப்பதைக் கண்டுபிடித்து விடுகிறார்கள் அல்லது வேறு ஏதாவது உறவை விரும்புகிறார்கள். அவர்கள் விரும்பும் உறவை ஆரம்பத்திலேயே சொன்னால், குறைந்தபட்சம் இரண்டு குடும்பங்களின் வாழ்க்கையாவது பாழாகாது. பின்னர் பெற்றோர்கள் முதலில் தெரிந்து கொண்டே, பின்னர் அது சரியாகி விடும் என்று நினைத்து அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கும் நிகழ்வுகளும் உள்ளன. ஆனால் அவ்வாறு நடப்பதில்லை. அது ஒரு பையனாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அவர்கள் சரியாக மாட்டார்கள். ஆனால் அவர்களில் ஒருவரின் வாழ்க்கை பாழாகி விடுகிறது. (ஜெர்மனியில் வருடாந்திர மாநாடு, உரை, ஜூன் 25, 2011 - குடும்பப் பிரச்சனைகள் மற்றும் அவற்றின் தீர்வுகள் பக்கம் 108)

அடுத்து, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) கூறுகிறார்கள்: சில பெண்கள் தங்கள் பெற்றோர் விரும்பாத இடத்தில் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். உதாரணமாக, பையன் அஹ்மதி அல்ல அல்லது மார்க்கத்துடன் தொடர்பற்றவனாக இருக்கிறான். ஆனால் பெண் இங்குதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கிறாள். பின்னர் சில பையன்கள் இருக்கிறார்கள். அவர்கள் முழு குடும்பத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் செயல்களைச் செய்கிறார்கள். எனவேதான் இந்த பிரார்த்தனை கற்றுத் தரப்பட்டுள்ளது, அல்லாஹ்வே! எங்கள் குழந்தைகளிடமிருந்து எந்த விதமான சோதனையையும் எங்களுக்கு எதிர்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தாதிருப்பாயாக. மாறாக அவர்களை எங்களுக்கு அருளுக்குரியவர்களாக்குவாயாக. மேலும் இந்த பிரார்த்தனை குழந்தையின் பிறப்பிலிருந்து அல்லது பிறக்கும் நம்பிக்கை இருக்கும் நேரத்திலிருந்து தொடங்கப்பட வேண்டும். (குடும்பப் பிரச்சனைகளும் அவற்றுக்கான தீர்வுகளும், பக்கம் 109)

ஆண்களும் பெண்களும் ஒரே மனநிலையிலும் ஒரே நிலைப்பாட்டிலும் இருந்தால், திருமண வாழ்க்கை வெற்றிகரமாகவும், பலனளிப்பதாகவும் இருக்கும். சில நேரங்களில் குடும்பப் பிரச்சினைகள் மனநிறைவு மற்றும் அல்லாஹ்வின் மீது (தவக்கல்) நம்பிக்கை இல்லாததால் எழுகின்றன. குடும்பத்தில் விரிசல் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்கி, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவில் கூறினார்கள்:

இதற்கு ஒரு காரணம் பெண்களுக்கு போதுமென்ற மனம் இல்லாததுதான். தங்கள் கணவர்களின் பைகளைப் பார்த்து கைகளைத் திறப்பதற்குப் பதிலாக, அவர்கள் தங்களை விட சிறந்தவர்களாக இருக்கும் தங்கள் நண்பர்கள் தோழிகளை அல்லது அண்டை வீட்டாரைப் பார்த்து செலவு செய்கிறார்கள். பின்னர் அவர்களின் கணவர்களிடம் அதிகமாகக் கோரிக்கை வைக்கிறார்கள். பின்னர் படிப்படியாக இந்த நிலைமை மோசமடைந்து விடுகிறது. சில சமயங்களில், இரண்டு, மூன்று அல்லது நான்கு குழந்தைகள் இருந்த போதிலும், மிகவும் பொறுமையிழந்து விடும் நிலையை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இதற்கான காரணம் பொறுமையின்மை, மனநிறைவின்மை எல்லாவற்றிற்கும் மேலாக, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை தவக்கல் இல்லாதது ஆகும். ஏனென்றால், அத்தகைய மக்கள் தங்கள் மனதை உலக எண்ணங்களால் மட்டுமே நிரப்புகிறார்கள். இதன் காரணமாக, அல்லாஹ்வின் மீது அவர்களின் நம்பிக்கையும் குறைகிறது. மேலும் அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இல்லை என்றால், அவர்கள் அவனுக்கு முன்பாக குனியவோ அல்லது அவனிடம் பிரார்த்தனை செய்யவோ மாட்டார்கள். எனவே இந்த விஷயம் தொடரும்போது, இன்னொரு விஷயமும் துவங்கி தொடர ஆரம்பித்து விடுகிறது. பின்னர் அல்லாஹ்வின் பக்கம் குனியாதவர்களை எப்படி நம்ப முடியும். எனவே அத்தகைய பெண்கள் தங்கள் வீடுகளை அழிக்கிறார்கள். தங்கள் கணவர்களிடமிருந்து பிரிந்து செல்வதற்கான கோரிக்கைகள் தொடங்கி ஒரு தீமையிலிருந்து இன்னொரு தீமை உருவாகி தொடர்கிறது. (குடும்பப் பிரச்சனைகளும் அவற்றின் தீர்வுகளும், பக்கம் 119-120)

> நம் பெற்றோரிடமிருந்து பிரிந்தால், நாம் எத்தனை பெரிய பாவங்களைச் செய்தவராகி விடுவோம் என்று மக்கள் நினைக்கிறார்கள். மேலும் சில பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை இந்த வழியில் பயமுறுத்துகிறார்கள். மேலும் அவர்கள் பிரிந்தவுடன், அவர்களுக்கு நரகம் கடமையாகி விடும் என்று கூறி அவர்களை மிரட்டுகிறார்கள். எனவே இது மிகவும் தவறான அணுகுமுறை ஆகும்..... நான் சில பெண்களிடம் பலமுறை கேட்டிருக்கிறேன். அவர்களின் மாமியார் மாமனார் முன், நாங்கள் எங்கள் சொந்த விருப்பப்படி வாழ்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்களின் பிள்ளைகளும் அதையே சொல்கிறார்கள். ஆனால் தனித்தனியாகக் கேட்டால், இருவரும் ஒரே பதிலைச் சொல்கிறார்கள். அதாவது அவர்கள் கட்டாயத்தின் காரணமாக (கூட்டுக் குடும்பத்தில்) வாழ்கிறார்கள். இறுதி விளைவு, சில நேரங்களில் மருமகள் மாமியாரின் மீது அநீதியிழைக்கிறாள். சில சமயங்களில் மாமியார் மருமகளின் மீது அநீதியிழைக்கிறாள்.
>
> (குடும்பப் பிரச்சினைகள் மற்றும் அதன் தீர்வு பக்கம் 77–79)

நேர்மையான பேச்சு மற்றும் இறையச்சம் இல்லாததால் வீடுகள் அழிந்து விடுகின்றன.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) கூறுகிறார்கள்: சில சமயங்களில் அந்தப் பெண்ணிடம் பையனின் நிலைமை பற்றிச் சொல்லப்படுவதில்லை அல்லது அந்தப் பெண்ணோ அல்லது பெண்ணின் பெற்றோரோ அதை ஒரு சாதாரண விஷயமாகக் கருதும் அளவுக்கு தெளிவற்ற மற்றும் மறைக்கப்பட்ட வார்த்தைகளில் சொல்லப்படுகிறது. ஆனால் நீங்கள் அதன் நடுவில் செல்லும்போது, அது பயமுறுத்தும் அளவுக்கு ஒரு பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தி விடுகிறது. இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில், அந்தப் பையன் அந்தப் பெண்ணை, தன் மனைவியை, வீட்டில் பரிவுடனும், அனுதாபத்துடனும் குடியேற்ற விரும்புகிறான். ஆனால் மாமியார் அல்லது நாத்தனார் மிகவும் கண்டிப்பைக் காட்டுகிறார்கள். தன் மகன் அல்லது சகோதரனை இது போன்ற அடக்குமுறைகளைச் செய்ய வைப்பதால், பாவப்பட்ட பெண்ணுக்கு இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. ஒன்று அவள் பிரிந்து விடுவது அல்லது அவள் வாழ்நாள் முழுவதும் இந்த அடக்குமுறையின் அநீதியில் இருப்பது. சில சந்தர்ப்பங்களில் இது போன்ற துஷ்பிரயோகங்கள் நடக்கும்போது, ஒரு மருமகளாகப் பெண்ணின் அதிகாரங்கள் அவளிடம் வரும்போது, அவள் மாமியாரையும் துஷ்பிரயோக முறையில் அவளை ஒடுக்கத் தொடங்குகிறாள் என்பதும் தெரிய வந்துள்ளது. எனவே, இறையச்சத்துடன் செயல்படாத அத்தகைய குடும்பங்களில் இது தொடரும் ஒரு தீய சுழற்சி ஆகும். திருமணத்தின்போது, திருமண சம்மதம் (ஈஜாப் வ குபூல்) கேட்கும்போது. இறையச்சம் மற்றும் நேர்மையான பேச்சைக் குறிப்பிடும் வசனங்களை ஓதி கவனமூட்டப்படுகிறது. (குடும்பப் பிரச்சனைகளும் அவற்றின் தீர்வுகளும் பக்கம் 28)

சில நேரங்களில், ஆண்களிடையே பேராசை மற்றும் சுய மரியாதை இல்லாததால் குடும்பப் பிரச்சினைகள் எழுகின்றன:

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: தங்கள் மனைவியரிடம் வரதட்சணையாக கொண்டு வந்த நகைகளை வியாபாரம் செய்ய எனக்குக் கொடுங்கள் அல்லது உங்களிடம் பணமாக என்ன இருக்கிறதோ, அதை என் தொழிலில் முதலீடு செய்ய எனக்குக் கொடுங்கள் என்று கேட்கும் சுயமரியாதைக் குறைவுள்ள ஆண்களும் உள்ளனர். கணவன் மனைவிக்கு இடையேயான உறவு அன்பு மற்றும் பாசத்தால் நிறைந்ததாக இருந்தால், பெண்கள் பரஸ்பர புரிதலுடன் கொடுத்து விடுகிறார்கள். சில நேரங்களில், கொஞ்சம் வெட்கமின்மை எல்லையைத் தாண்டிச் செல்கிறது. ஒருவர் வெட்கமற்றவராக மாறும்போது,... உங்கள் தந்தை பணக்காரர் செல்வந்தர் என்று மனைவியிடம் சொல்லப்படுகிறது. எனவே நான் வியாபாரம் செய்ய இந்த அளவு பணத்தை அவரிடமிருந்து பெற்றுத் தரும்படி கேட்கப்படுகிறது. இதில் பையனின் குடும்பத்தினர் சகோதர சகோதரிகள் போன்றோர் பணத்தைக் கேட்கத் தூண்டி விடும் செயலில் இணைந்து விடுகின்றனர். (குடும்பப் பிரச்சனைகளும் அவற்றின் தீர்வுகளும் பக்கம் 89)

இப்போது மகிழ்ச்சியான மற்றும் அமைதியான குடும்ப வாழ்க்கைக்கான வழிகாட்டும் போதனைகளைப் பார்ப்போம்:

எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ ۚ فَاِنْ كَرِهْتُمُوْهُنَّ فَعَسٰۤى اَنْ تَكْرَهُوْا
شَيْـًٔا وَّيَجْعَلَ اللّٰهُ فِيْهِ خَيْرًا كَثِيْرًا

மேலும் அவர்களுடன் நன்முறையில் வாழுங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால், நீங்கள் வெறுக்கின்ற -வற்றில் அல்லாஹ் ஏராளமான அருள்களை வைத்து விடலாம். (4:20)

எனவே திருமணம் செய்து கொள்ளும்போது, கண்ணியத்தின் தேவை என்னவென்றால், நீங்கள் ஒருவரையொருவர் பொறுத்துக் கொள்வது, நன்றாக நடந்து கொள்வது, ஒருவரையொருவர் புரிந்து கொள்வது மற்றும் இறையச்சத்துடன் இருப்பது. நீங்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து ஒருவருக்கொருவர் நன்றாக நடந்து கொண்டால், வெளிப்படையான வெறுப்பு விருப்பமாக மாறும். மேலும் இந்த உறவிலிருந்து நீங்கள் அதிக நன்மையையும் பலனையும் பெறலாம். ஏனென்றால் அல்லாஹ் மறைவானதை அறிந்தவன் மற்றும் அனைத்து சக்திகளுக்கும் சொந்தக்காரன். அவன் அதில் நன்மையையும் சிறப்பையும் உருவாக்குவான்.



இந்த பிரார்த்தனையை அல்லாஹ் திருக்குர்ஆனில் கற்றுத் தந்துள்ளான்.

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

எங்கள் இறைவனே! எங்கள் மனைவியரிடமிருந்தும், குழந்தைகளிடமிருந்தும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சியை வழங்குவாயாக! எங்களை நல்லடியார்களுக்கு இமாமாக ஆக்குவாயாக. (25:75)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த பிரார்த்தனை ஆண்களுக்கு முக்கியமானது. அதே போல் பெண்களுக்கும் முக்கியமானது ஆகும். ஒருவருக்கொருவர் கண்களுக்கு குளிர்ச்சியாக இருப்பதும் முக்கியமானது ஆகும். நீங்கள் ஒருவருக்கொருவர் கண்களுக்கு குளிர்ச்சியாக இருக்க பிரார்த்தனை செய்யும்போது, நீங்கள் ஒருவருக்கொருவர் நன்றாக நடந்து கொள்வதையும் பார்ப்பீர்கள். ஒருவருக்கொருவர் தவறுகளை விட்டு விடுவீர்கள். ஒருவருக்கொருவர் நல்லொழுக்கங்களைப் பார்ப்பீர்கள். நீங்கள் இதை பிரார்த்தனையுடனும் முயற்சி -யுடனும் செய்யும்போது, இறைவன் நாடினால், உங்கள் உறவுகளும் வெற்றி பெறும்.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: என்னுடைய சொந்த நிலைமை என்னவென்றால், நான் என் நண்பர்களையும் குழந்தைகளையும் மனைவியையும் சேர்க்காத எந்த பிரார்த்தனையும் எனக்கு இல்லை.

## இல்லற வாழ்வில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரி

குடும்ப வாழ்க்கையைப் பற்றி உம்முல் மு:.மினீன் ஹஸ்ரத் ஆயிஷா சித்தீகா (ரலி) அவர்கள் கூறுகையில், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது முழு வாழ்நாளிலும் தமது மனைவியை ஒருபோதும் அடித்ததில்லை. எந்த வேலைக்காரனையும் அடித்ததில்லை. (ஷமாயில் அல்-திர்மிதி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் பண்பு பற்றிய அத்தியாயம், ஹதீஸ் 344)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களின் நலனிலும் நல்வாழ்விலும் கவனம் செலுத்துங்கள், ஏனென்றால் பெண் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவள். (அதாவது, அவளுக்கு விலா எலும்பைப் போன்ற இயற்கையான வளைவு உள்ளது). அதன் பெரும் பகுதி வளைந்துள்ளது. நீங்கள் அவளை நேராக்க முயற்சித்தால், நீங்கள் அவளை உடைப்பீர்கள். நீங்கள் அவளை அப்படியே விட்டு விட்டால், அவளிடம் இருப்பதை நீங்கள் தொடர்ந்து பெறுவீர்கள். எனவே பெண்களை மென்மையாக நடத்துங்கள். இந்த விஷயத்தில் எனது போதனையைப் பின்பற்றுங்கள்." (ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் 5186)

பின்னர் ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மூ:.மின் தனது மூ:.மினான மனைவியை வெறுக்கவோ அல்லது அவர் மீது கோபப்படவோ கூடாது. அவளிடம் ஏதாவது அவருக்குப் பிடிக்கவில்லை என்றால் வேறு விஷயம் பிடித்தமானதாக இருக்கலாம். (ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் 3648)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பெண்களின் உரிமைகளை நிலைநாட்டினார்கள். ஒரு முறை தோழர்கள் தங்கள் மனைவிகளை அடிப்பது பற்றி அன்னாரது கவனத்திற்கு வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்கள் அல்லாஹ்வின் அடிமைகள்; உங்கள் அடிமைகளல்ல. நீங்கள் அவளை அறையாதீர்கள். அவள் மீது அடக்குமுறைகளை மேற்கொள்ளாதீர்கள். அவளை வீட்டை விட்டு வெளியேற்றாதீர்கள்.

பின்னர் ஒரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது: நீ சாப்பிடுவதை அவளுக்கும் கொடு. நீ அணிந்திருப்பதை அவளுக்கும் அணிவிக்க செய். அவள் முகத்தில் அடிக்காதே. அவளை அசிங்கப்படுத்தாதே. அவள் செய்த தவறு காரணமாக அவளுக்கு ஒரு பாடம் கற்பிக்க நீங்கள் அவளை விட்டு விலகி

இருக்க வேண்டியிருந்தால், வீட்டிலேயே அதைச் செய்யுங்கள். அதாவது, அவளை வீட்டை விட்டு வெளியேற்றாதீர்கள். (சுனன் அபுதாவூத், கிதாப் அந்-நிக்காஹ், மனைவியரின் உரிமைகள் பற்றிய அத்தியாயம், ஹதீஸ் 2142, குடும்பப் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் 166-167)

## பலதாரமணம் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் முதல் மனைவியின் உரிமைகள்

இஸ்லாம் இரண்டாவது திருமணத்தை சில நிபந்தனைகளுடன் சில சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அனுமதி வழங்குகிறது.

இஸ்லாமிய போதனைகளைப் பின்பற்றினால், வீட்டின் அமைதியான சூழ்நிலையும் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையும் ஒருபோதும் பாதிக்கப்படாது. மேலும் முதல் மனைவியின் உரிமைகள் ஒருபோதும் மறுக்கப்படாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஓர் ஆண் இரண்டாவது மனைவியின் தேவையை உணர்ந்தாலும், இரண்டாவது மணமுடிப்பது தனது முதல் மனைவிக்கு கடுமையான வலியை ஏற்படுத்தி, அவளுக்கு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்துவதைக் கண்டால், அவர் பொறுமையாக இருக்க முடியும் எனில், எந்தவித ஆபத்திலும் மூழ்காமல் அதாவது பாவச் செயலில் ஈடுபடாமல், எவ்வித மார்க்கக் கட்டளைக்கு மாறு செய்யாமல் இருக்க முடியும் எனில் அப்படிப்பட்ட சூழ்நிலையில், அவர் தனது முந்தைய மனைவியின் ஆறுதலுக்காக தனது தேவைகளைத் தியாகம் செய்து, ஒரே ஒரு மனைவியுடன் திருப்தி அடைந்தால், எந்தத் தீங்கும் இல்லை. மேலும் அவர் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது பொருத்தமானது. (மல்ஃபூஸாத் தொகுதி VII, பக்கங்கள் 64-65, இலண்டன் பதிப்பு)

ஹஸ்ரத் அமீருல் மு‘மினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

திருமணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் பலதாரமணம் புரியாதீர்கள். இஸ்லாம் எங்களுக்கு நான்கு திருமணம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது என சில ஆண்கள் கூறுகிறார்கள். அவர்களுக்கும் பதில் தரப்பட்டுள்ளது. முதல் விஷயம் என்னவென்றால், உங்கள் முதல் மனைவியின் உணர்வுகளுக்காக நீங்கள் பொறுமையாக இருக்க முடிந்தால், அதைச் செய்யுங்கள். ஆம், ஏதேனும் மார்க்க அடிப்படையிலான தேவை இருக்கும் எனில் நிச்சயமாக இது போன்ற சூழ்நிலைகளில், பொதுவாக முதல் மனைவிகளும் அனுமதி அளிப்பார்கள். எனவே எப்படியிருந்தாலும், ஒரு ஆண் தனது முதல் மனைவியின் உணர்வுகளுக்காக தியாகம் செய்ய வேண்டும். மேலும் தீவிர கட்டாயத்தின் பேரில் தவிர, விருப்பத்திற்காக திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்பதே சுருக்கம் ஆகும். (குடும்பப் பிரச்சனைகளும் அவற்றின் தீர்வுகளும் பக்கம்142-143)

குடும்ப வாழ்க்கையில் நாக்கு, காது கண் ஆகிய உறுப்புகளுக்கு முக்கிய பொறுப்பு இருக்கிறது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: குடும்பத் தகராறுகளில் நாக்கு, காது மற்றும் கண்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதைக் காணலாம். ஆண்கள் அவற்றை சரியாகப் பயன்படுத்துவதில்லை. பெண்களும் அவற்றை சரியாகப் பயன்படுத்துவதில்லை. நான் முன்பும் கூறி இருந்தேன், ஆலோசனை கேட்கும் தம்பதிகளிடம், நீங்கள் உங்கள் நாக்கு, காதுகள் மற்றும் கண்களை ஒருவருக்கொருவர் சரியாகப் பயன்படுத்தினால், உங்களிடம் பிரச்சினைகள் ஒருபோதும் எழாது என்று நான் அடிக்கடி கூறி வருவேன். நாவை மென்மையாகவும் அன்புடனும் பயன்படுத்தினால், பிரச்சினைகள் ஒருபோதும் எழாது. இரு தரப்பினரின் உறவுகளுக்கும் அல்லது கேட்கும் போது கசப்பை ஏற்படுத்தக்கூடிய பிற விஷயங்களுக்கும் உங்கள் காதுகளை மூடிக்கொள்ளுங்கள். சில நேரங்களில் ஒருவர் அல்லது ஒரு தரப்பினர் ஏதாவது தவறாகப் பேசினால், மற்றவர்களும் அதே வழியில் அதற்கு பதில் அளிக்கிறார்கள். நீங்கள் சிறிது நேரத்தில் சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வர முயற்சித்தால், உங்கள் காதுகளை மூடினால், பல பிரச்சனைகளை சரி செய்து விடலாம். (குடும்பப் பிரச்சனைகளும் அவற்றின் தீர்வுகளும் பக்கம் 135-136)



மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையின் போதனைகளில் ஒன்று, கணவன்-மனைவி தங்களுக்கு இடையே உள்ள விவகாரங்களைப் பற்றி பெற்றோரிடமோ அல்லது உறவினர்களிடமோ சொல்லக் கூடாது.

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: இன்றைய சமுதாயத்தில், கணவனும் மனைவியும் தங்களுக்கு இடையேயான விஷயங்களைப் பற்றி, அவர்கள் தங்கள் பெற்றோரிடம் கூறுகிறார்கள், பின்னர் சில சமயங்களில் இது மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. சண்டைகள் மற்றும் சச்சரவுகள் எழுகின்றன. சில நேரங்களில் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளிடம் துருவித்துருவி விஷயங்களைக் கேட்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். பிறகு இதுவே சண்டைகளுக்கு வழிவகுக்கிறது. எனவே, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கணவனும் மனைவியும் என்ன மாதிரியான விஷயங்களாக இருந்தாலும் அதனை மற்றவர்களிடம் சொல்ல உரிமை இல்லை. மற்றவர்கள் அவர்களிடம் கேட்கவும் கூடாது. இந்த அறிவுரையைப் பின்பற்றுபவர்கள் இருந்தால், என் கருத்துப்படி, பல சண்டைகள் தானாகவே முடிவடைந்தது விடும். (குத்பா உரை, ஜுலை 15, 2005, குடும்பப் பிரச்சனைகளும் அவற்றின் தீர்வுகளும் பக்கம் 40)

(தொடரும்...)

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் [அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்] அவர்களின் கட்டளைகளின் ஒளியில் சமூக வலைதளங்களை சரியான முறையில் பயன்படுத்துவதும், அதன் பயன்களும், மேலும் அதனை தவறாகப் பயன்படுத்துவதில் இருந்தும், அதன் இழப்புகளிலிருந்தும் தவிர்ந்திருத்தல்

மவ்லவி K. தாரிக் அஹ்மத்
(அடிஷ்னல் நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத் நூருல் இஸ்லாம்)

தமிழாக்கம்: மவ்லவி M. ரஃபீக் அஹ்மத்



*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

இன்றைய காலக்கட்டத்தில் இளைஞர்கள் சமூக ஊடங்களில் நேரத்தை வீணாக்குவதற்குப் பகரமாக ஜமாஅத் ரீதியிலான, அறிவுப்பூர்வமான தர்பிய்யத் ரீதியிலான மற்றும் ஆராய்ச்சி செய்கின்ற விஷயங்களில் இருந்து பயன்பெற வேண்டியது அவசியமானதாகும். ஏனென்றால், உண்மையான ஆற்றல் மூளை மற்றும் அறிவின் வளர்ச்சியில் தான் இருக்கின்றது. எல்லையற்ற SCROLLING–ல் நம்மிடம் அல்லாஹ்வின் மகத்தான அருள் இருக்கின்றது. அதாவது ஜமாஅத்தில் அத்தகைய எண்ணற்ற நூல்களும் விஷயங்களும் இருக்கின்றன. அவை ஈமானை மட்டும் வலுப்படுத்தவில்லை. மாறாக, சிந்தனை மற்றும் அகப்பார்வையின் உலகைக் கூட அவை ஒளிமயமாக்குகின்றன. எந்த சில நூல்களை இளைஞர்கள் எப்போதும் தங்களது வாசிப்பில் வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கின்றதோ அவற்றை நான் உங்கள் முன்னால் எடுத்துக் கூறுகின்றேன். இந்த நூல்கள் பெரும்பாலும் ஆங்கில மொழியில் AL-ISLAM WEBSITE–ல் கிடைக்கின்றன.

திருக்குர்ஆனின் ஆழமான ஞானத்தைப் பெறுவதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் திருக்குர்ஆன் மொழியாக்க வகுப்புகளை YOUTUBE–ல் முறையாக கேளுங்கள். FIVE VOLUME COMMENTARY–ஐ படியுங்கள்.மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சூரத்துல் ஃபாத்திஹாவிற்கான விளக்கவுரையைப் படிப்பதன் மூலமாக உங்களை நீங்களே திருக்குர்ஆனின் அறிவின் மூலமாக அறிந்து கொள்ளுங்கள். மேலும் அறிவை பெறுவதற்கும் ஆழமான ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கும் REVELATION, RATIONALITY KNOWLEDGE & TRUTH என்ற நூலை படியுங்கள். இஸ்லாமிய வரலாறு மற்றும் அஹ்மதிய்யத்தை பற்றிய அடிப்படையிலான அறிவை பெறுவதற்காக INTRODUCTION TO THE STUDY OF HOLY QURAN, கிலாஃபத்தே ராஷிதா, இஸ்லாத்தில் பிரிவினைக்கான ஆரம்பம், ஸீரத் காத்தமன் நபிய்யீன் என்ற நூலின் மூன்று பாகங்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் நூலான 'ஹஸ்ரத் அஹ்மது (அலை)', சவுத்ரி ஸபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் நூலான ஹஸ்ரத் மவ்லவி ஹகீம் நூருத்தீன் (ரலி), ஷேக் முஜீபுர்ரஹ்மான் சாஹிப் அவர்கள் எழுதிய ஃபஸ்லே உமர் என்ற நூல், LEIN ADMEN எழுதிய A MAN OF GOD என்ற நூல், இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் வரலாறு மட்டுமல்ல. மாறாக, ஆன்மிக முன்னேற்றத்திற்கான கருவூலமாக இருக்கின்றது.

இஸ்லாமிய போதனைகளின் உண்மையையும், அதன் அடிப்படையான புரிதல் தொடர்பான தகவல்களை பெறுவதற்கு AN ELEMENTARY STUDY OF ISLAM மற்றும் SALAT THE MUSLIM PRAYER BOOK ஆகியவை இளைஞர்களுக்கான சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றது. இஸ்லாமிய கொள்கைகளின் உறுதியான வலிமையை பெறுவதற்கு 'இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம்', இக்காலத்திலுள்ள பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வு (ISLAM'S RESPONSE TO CONTEMPORARY ISSUES), மார்க்கத்தின் பெயரால் இரத்தம் (MURDER IN THE NAME OF

ALLAH), ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய OUR GOD, 'இறைவனின் இருப்பிற்கான பத்து ஆதாரங்கள்' போன்ற நூல்கள் ஈமானின் வலிமைக்கான அடித்தளமாக ஆக முடியும். இவ்வாறே தப்லீக் செய்யும் தகுதிகளை வளர்த்துக் கொள்வதற்கு உலகநெருக்கடியும் அமைதிக்கான வழியும், இஸ்லாத்தில் பொருளாதார அமைப்பு (THE ECONOMIC SYSTEM OF ISLAM), A MESSAGE FOR OUR TIME மற்றும் சமாதானத்தூது போன்ற நூல்கள் மிகவும் பயனுள்ளதாகும். நமது ஆன்மிக சீர்திருத்தம் மற்றும் செயலளவிலான வாழ்க்கையை சரிசெய்வதற்காக நூஹ் நபியின் கப்பல், இமாமின் தேவை, செயல் சீர்திருத்தமும் நமது பொறுப்புகளும், பைஅத் நிபந்தனைகளும் ஒரு அஹ்மதியின் பொறுப்புகளும் போன்ற நூல்கள் ஒவ்வொரு இளைஞரின் வாசிப்பிலும் நிரந்தரமான இன்பத்தை அவர்களுக்கு வழங்கக்கூடிய பகுதியாக ஆகிவிட வேண்டும்.நமது இளைஞர்கள் தினந்தோறும் சிறிது நேரத்தை இந்த வழிமுறைகளை பெற்றுக் கொள்வதற்காக செலவழித்தால் அவர்கள் சமூக ஊடகங்களின் அசுத்தமான விஷயங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதுடன் மட்டுமல்லாமல் அறிவு, சிந்தனை, செயல் மற்றும் இறைநெருக்கம் ஆகிய களங்களிலும் கூட மிகப்பெரும் முன்னேற்றத்தை பெறுவார்கள்.




இவ்வாறே இந்தியாவில் ஜமாஅத்திற்கு இருக்கின்ற சமூக ஊடகங்களின் தளங்கள் உதாரணமாக, ADDITIONAL NAZARAT NOORUL ISLAM துறையின் கீழ் MTA INDIA, PRESS & MEDIA துறையின் கீழ் இந்தியாவின் சமூக ஊடகமான @islamiind X HANDLES ஆகியவை இருக்கின்றன. மேலும் LIGHT OF ISLAM WEBSITE–ம் உள்ளது. அவற்றில் மிக உயர்ந்த தரத்திலுள்ள மார்க்க, அறிவுப்பூர்வமான மற்றும் தப்லீக்குடன் தொடர்புள்ள கருத்துக்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இளைஞர்கள் இந்த வழிகளை பின்பற்றி சென்றால் அது நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதோடு மட்டுமின்றி, ஈமான், அறிவு, சிந்தனை ஆகியவற்றிலும் வலிமை உருவாகும். இதைத் தவிர ஜமாஅத்தின் தலைமையக பத்திரிகைகளான பத்ர் பத்திரிகை, REVIEW OF RELIGIONS, அல் ஹகம் போன்றவை உள்ளன. அவற்றை தொடர்ந்து படிக்கின்ற பழக்கமும் கூட ஆன்மீக முன்னேற்றம், சிந்தனையின் வலிமை ஆகியவற்றிற்குரிய வழியாக இருக்கின்றது. இவை அனைத்துமே சமூக ஊடகங்கள் மற்றும் INTERNET–ற்கு பகரமாக இருக்கும் மாற்று ஏற்பாடுகள் ஆகும். அவை இளைஞர்களை எப்போதும் பணிகளில் ஈடுபடுத்தக் கூடியவையாக இருக்கின்றன. அவர்களை பாதுகாக்கவும் செய்கின்றன.




ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது காலத்தில் மீண்டும் இந்த உண்மையின் பக்கம் கவனமூட்டினார்கள். அதாவது இந்த காலத்தில் எந்த புதிய கண்டுபிடிப்புகள் தோன்றிக் கொண்டிருக்கின்றதோ அவை உண்மையில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் பிரச்சாரத்திற்கும் அதனை பரப்புவதற்காகவும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அவனது ஆதரவு மற்றும் உதவியின் அடையாளமாகும். இன்றைய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளில் குறிப்பாக இப்போது சமூக ஊடகங்கள் தான் இன்றைய வழக்கத்தில் இருந்து வருகின்ற ஒரே ஊடகமாக இருக்கின்றது. அதுதான் இஸ்லாத்தின் உண்மை மற்றும் முஹம்மது (ஸல்) அவர்களின் அருள்களை மின்னல் வேகத்தில் முழு உலகம் வரை பரப்புவதற்கான மற்றும் சென்று சேர வைப்பதற்கான மிகவும் ஒத்துழைப்பு நல்குகின்ற உதவுகின்ற பயனுள்ள வழியாக நிரூபணமாகிக் கொண்டு இருக்கின்றது.

சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் இந்த புதிய கண்டுபிடிப்புகள் இந்த காலத்தில் நமக்காக அவன் கிடைக்கும்படி செய்துள்ளான். நமக்காக இவற்றை கிடைக்கும்படி செய்து தப்லீக்கின் வழியில் அவன் வசதியை உருவாக்கி விட்டான். இதில் நமது முயற்சி இவ்வாறு இருக்க வேண்டும். அதாவது வீணான விஷயங்களில் நேரத்தை கழிப்பது, இந்த வசதிகளிலிருந்து தவறான முறையில் பயன்பெறுவது ஆகியவற்றிற்கு பகரமாக இந்த வசதிகளிலிருந்து சரியான முறையில் பயன் பெறுங்கள். அவற்றை செயல்படுத்துங்கள்.

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார் –கள்: PRESS (பத்திரிகைகளும்), INTERNET–ம், MTA–ம் உலகின் பல்வேறு மொழிகளில் உண்மையான மார்க்கத்தின் தூதுச் செய்தியை

எட்ட வைத்துக் கொண்டிருக்கின்றன. பல்வேறு மொழிகளில் ஜமாஅத்தின் WEBSITE பணிபுரிகின்றன. இன்று ஒவ்வொரு அஹ்மதியும் அல்லாஹ்வின் ஆதரவு மற்றும் உதவியில் பங்கு வகிப்பதற்கும், தம்மைத்தாமே எப்போதும் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாக ஆக்குவதற்கும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் கைகளை வலுப்படுத்தியவாறு மார்க்கத்தை பரப்புகின்ற பணியில் பங்குபெறுவது அவரது வேலையாக இருக்கின்றது. அதன் மூலமாக அல்லாஹ் கிலாஃபத்தின் வாக்குறுதி பற்றி கூறியுள்ள வசனங்களில் குறிப்பிட்டு கூறிய அந்த மக்களைச் சார்ந்திருப்பவர்களாக எப்போதும் ஆக வேண்டும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சமூக ஊடகங்கள் மூலமாக தப்லீக்கிற்கான வழிமுறைகளையும் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். அவர்கள் சமூக ஊடங்களில் திருக்குர்ஆன், நபிமொழிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களிலிருந்து தாக்கத்தை ஏற்படுத்துக்கக்கூடிய கருத்துக்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். எங்கு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு எதிராக ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றதோ அங்கு வலுவான ஆதாரத்துடன் கூடிய மறுக்க முடியாத பதில்கள் எனும் அம்புகளை தொடர்ந்து எய்து கொண்டிருங்கள்.

இது தொடர்பாக 6 ஜூன் 2025–ல் நிகழ்த்திய குத்பா பேருரையில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இன்றைய நாட்களில் எங்கு சமூக ஊடகங்களில் இருந்து பலன் இருக்கின்றதோ, அதிலிருந்து பலன் பெறப்படுகின்றதோ அங்கு அப்படிப்பட்ட துன்பத்தை தரக்கூடிய சில விஷயங்களும் நடந்து விடுகின்றன. அதிலிருந்து பயனடைந்தவாறு அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதராக மிகவும் தரக்குறைவான விஷயங்களை பேசுகின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக அவர்கள் பொய்யையும், அசுத்தமான வார்த்தைகளையும் கூறுகின்றனர். அவற்றைக் கேட்டு அஹ்மதியின் உள்ளம் சல்லடையாகி விடுகின்றது. பிறகு எதிர் நடவடிக்கையாக சில அஹ்மதிகள் அவற்றிற்கான பதிலை தவறான முறையில் தருகின்றனர். அந்த அஹ்மதிகளின் நிய்யத் (எண்ணம்) தூயதாக இருந்தாலும் கூட சில நேரங்களில் அவர்களிடமிருந்து எவ்வாறான சொற்கள் வெளிவந்து விடுகின்றன என்றால் அவற்றிற்கு தவறான பொருளை கற்பிக்க முடியும். இது நமது வழிமுறையல்ல. இதிலிருந்து ஓர் அஹ்மதி தவிர்ந்திருக்க வேண்டும்.




சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: தப்லீக்கிற்கான ஒவ்வொரு வழியையும் பயன்படுத்த முயற்சி செய்யுங்கள். புதிய வழிமுறைகளை இளைஞர்கள் அதிகமாக சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். பல்வேறு WEBSITE உள்ளன. அவற்றில் பல்வேறு வீணான ஆட்சேபனைகள் வருகின்றன. அவற்றை உண்மையின் தூதுச் செய்தியால் நிரப்பி விடுங்கள். அறிவில் குறைவு இருந்தால் உங்களை விட பெரியவர்களாக இருப்பவர்களிடமும், முபல்லிக்களிடமும் உதவி பெறுங்கள். இன்று உலகில் வாழ்கின்ற ஒவ்வோர் இளைஞரும் இந்த பணிகளில் பங்கு பெறுபவர்களாக ஆகுவதற்கான தேவை இருக்கின்றது. அப்போது தான் ஏகத்துவத்தை நிலைநாட்டு –வதில் உண்மையான பங்கை அவர்களால் வகிக்க முடியும். முஹம்மதிய்ய மஸீஹின் தொண்டர்களால் தான் புதிய வழிமுறைகள் மூலமாக முழு உலகிலும் ஒரு புரட்சியை உருவாக்க முடியும். எனவே இந்த விஷயத்தில் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். (குத்பா ஜும்ஆ 24 செப்டம்பர் 2010)

18 செப்டம்பர் 2017–ல் நடைபெற்ற மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனியின் வருடாந்திர இஜ்திமாவில் நிகழ்த்திய சொற்பொழிவில் இளைஞர்களுக்கு போதனை செய்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நமது இளைஞர்கள் கூட தேவையற்ற, வீணான விஷயங்களிலும் விளையாட்டுகள் மற்றும் கேளிக்கை –களுக்குப் பின்னால் சென்று விட்டால் பிறகு உலகில் உண்மையை தேடுபவர்களை யார் பாதுகாப்பார்கள்? அஹ்மதி இளைஞர்களின் காதுகளில் எல்லா நேரமும் இன்றைய கண்டுபிடிப்புகளான MP3 அல்லது மற்ற வழிமுறைகள் மூலமாக MUSIC அல்லது பாடல்கள் கேட்பதற்காக EARPHONE மாட்டியிருந்தால் பிறகு உங்களது

சூற்றுச்சூழலில் நன்மைகளை யார் பரப்புவார்கள்? நன்மைகளில் முன்னேறிச் சென்று பிறகு பின்தங்கி இருப்பவர்களை மேலே இழுத்து கொண்டு வருவதற்கு முயற்சி செய்பவர்கள் யார் இருப்பார்கள்? MP3–ஐ பொறுத்தவரை அது ELECTRONIC–ன் கண்டுபிடிப்பாக இருக்கின்றது. MP3–ம் அல்லது வேறு கண்டுபிடிப்புகளும் தீயதல்ல. அவற்றை தவறாக பயன்படுத்துவதுதான் தீயதாகும். அவற்றை சரியாக பயன்படுத்துகின்ற வகையில் உண்மையான மார்க்கத்திற்கான வலுவான ஆதாரங்களால் அவற்றை நிரப்புங்கள். பிறகு அதை காதுகளில் மாட்டிக் கொண்டு கேளுங்கள். அதன் மூலம் ஆதாரங்கள் உங்கள் நினைவில் இருக்கும். அவற்றை மனனம் செய்ய முடியும்.



சமூக ஊடகங்களில் இன்றைய காலகட்டத்தில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு எதிராக அடித்தளமற்ற ஆட்சேபனைகளும், தவறான விஷயங்களும் குற்றச்சாட்டுகளும் பொதுவானதாக ஆகிக் கொண்டிருக்–கின்றது. குறிப்பாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புனித இருப்பின் மீது பொய்யான தான்தோன்றித்தனமான அவதூறுகள் சுமத்தப்படு–கின்றன. அத்தகைய சூழ்நிலையில் நமது ஈமானின் தன்மான உணர்வு எதிர்பார்ப்பது என்னவென்றால், நாம் அமைதியாக அவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக, ஆதாரப்பூர்வமாகவும், அழகிய முறையிலும் ஜமாஅத்தால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களிலிருந்து பயனடைந்தவாறு அந்த ஆட்சேபனைகளுக்கு அறிவுப்பூர்வமான மறுப்பை தர வேண்டும். இன்று இந்த உணர்வுதான் எல்லாவற்றையும் விட அதிகமாக தேவைப்படுகின்றது. அதாவது நாம் நேர்மையான வழிமுறை மூலமாக சமூக ஊடகங்களின் களத்தில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தை தற்காத்தவாறு உண்மையின் குரலை எழுப்ப வேண்டும்.

சமூக ஊடகங்களின் மூலமாக தப்லீக் செய்வது தொடர்பாக புதிய தலைமுறையினரின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டியாவறு செய்யதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ் இந்த காலத்தில் நமது ஜமாஅத்தின் பலனுக்காக புதிய செயற்கைகோள் அமைப்பு மற்றும் ஊடகம் போன்ற செய்தியை எட்ட வைக்கின்ற வசதிகளை தந்துள்ளான். உலகின் ஒவ்வொரு மூலை வரையிலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக இந்த வழிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக நிரூபணம் ஆகிக் கொண்டிருக்கின்றது. எவ்வாறு MTA மூலமாக ஜமாஅத்தின் தூதுச் செய்தி பூமியின் எல்லைகள் வரை எட்டிவிட்டதோ அந்த நிலைமையானது நமது பொறுப்புகளை மேலும் அதிகமாக்குகிறது. ஏனென்றால், எவர்கள் நமது தூதுச் செய்தியை கேட்கின்றாரோ உண்மையில் இவர்கள் கூறுவதற்கு ஏற்ப தாமும் செயல்படுகின்றார்களா என்பதை அறிந்து கொள்வதற்காக நமது பக்கம் பார்ப்பார்கள். நாம் முன்வைக்கின்ற போதனைகள் உண்மையானவையே. ஆனால் அஹ்மதிகளின் செயலளவிலான தரத்தில் பலகீனம் இருப்பதை அந்த மக்கள் பார்க்கும்போது பிறகு அவற்றால் அவர்களுக்குத் நேர்மறையான தாக்கங்கள் ஏற்படுவதற்கு பகரமாக எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. இதுவும் சாத்தியம்தான். மற்றவர்கள் நமது தூதுச் செய்தியை கேட்பார்கள். ஆனால் பழைய அஹ்மதிகளின் செயலளவிலான தரம் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப இல்லையெனில் பிறகு அவர்களே இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை பரப்புவது மற்றும் அதற்கேற்ப செயல்படுவதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது ஜமாஅத்தின் அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் முன்னேற்றமும், வெற்றியும் புதிதாக வந்த அந்த நபர்களில் இருக்கின்ற நல்ல மக்களிடம் சென்று விடும். அந்த வெற்றியின் கிரீடம் அவர்களின் தலை மீது இருக்கும். பின்தங்கியவர்கள் இந்த அருள்களிலிருந்து விலகி இருப்பர். எனவே பின்தங்கியவர்களின் பட்டியலில் நீங்கள் இருக்ககூடாது. மாறாக, தமது சொல்லால் மட்டுமல்லாமல் தமது செயல்களாலும் பணிகளாலும் அஹ்மதிய்யத்தை பரப்புபவர்களின் முதல் அணியில் இருப்பவர்களாக நீங்கள் திகழ வேண்டும். நீங்கள் அத்தகைய ஒளியின் தலையூற்றாக ஆகிவிடுங்கள். அதன் கதிர்கள் இஸ்லாத்தின் உண்மையை ஒளிபெறச் செய்ய வேண்டும். (அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 25 மார்ச் 2015–ல் அச்சிடப்பட்டது)

சமூக வளைதளங்களிலிருந்து நமக்கு விடுதலை கிடைக்க முடியாது. எனினும் அதன் தீங்கிலிருந்து நாம் நம்மையும், நமது வருங்கால தலைமுறையையும் பாதுகாப்பாக வைப்பதற்கு நாம் அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளுக்கு ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்காக துஆக்களை கற்றுத் தந்துள்ளார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு துஆவை நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். இன்றைய காலத்தில் தீமைகளிலிருந்து தப்பிப்பதற்காக நாம் அதிகம் அதிகமாக இந்த துஆவை செய்ய வேண்டும். அந்த துஆ இதுவாகும்.

அல்லாஹ்வே! எங்களது உள்ளங்களில் அன்பை ஏற்படுத்துவாயாக. எங்களை சீர்திருத்துவாயாக. எங்களை இரட்சிப்பின் வழிகளில் வழிநடத்துவாயாக. எங்களுக்கு இருள்களிலிருந்து இரட்சிப்பை வழங்கி ஒளியின் பக்கம் கொண்டு செல்வாயாக. எங்களை வெளிப்படையான மற்றும் மறைமுகமான வெட்கங்கெட்ட செயல்களிலிருந்து பாதுகாப்பாயாக. எங்களுக்கு எங்களது காதுகளிலும், எங்களது கண்களிலும், எங்களது மனைவிமார்களிலும், எங்களது சந்ததிகளிலும் அருளை வைப்பாயாக. கருணையுடன் எங்கள் பக்கம் திரும்புவாயாக. நிச்சயமாக நீயே பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்பவனும், மீண்டும் மீண்டும் கருணை புரிபவனுமாவாய். எங்களை எங்களது அருள்களுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும், நல்ல முறையில் அதைப்பற்றி பேசுபவர்களாகவும் அவற்றை ஏற்றுக் கொள்பவர்களாகவும் ஆக்குவாயாக. அல்லாஹ்வே! எங்கள் மீது அருள்களை முழுமைபடுத்துவாயாக.

இது உலகின் தவறான பொழுதுபோக்குகளிலிருந்து பாதுகாப்பதற்கான துஆவாகும். எல்லாவிதமான வீணான விஷயங்களிலிருந்து தடுப்பதற்காக இது இருக்கின்றது. ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து தடுப்பதற்காக இது இருக்கின்றது.

இந்த துஆக்களின் சொற்களோடு நான் எனது உரையை நிறைவு செய்கின்றேன். நாம் புதிய காலக்கட்டத்தின் கண்டுபிடிப்புகளிலிருந்து முழுமையாக பயனடைந்தவாறு நமது கல்வி, தப்லீக் மற்றும் தர்பிய்யத்தின் தகுதிகளில் அதிகரித்துக் கொண்டே செல்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. அவற்றை தவறாக பயன்படுத்துவதில் இருந்து தவிர்ந்திருப்பதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக. ஆமீன்.

**ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**தப்லீகிற்கான ஒவ்வொரு வழியையும் பயன்படுத்த முயற்சி செய்யுங்கள். புதிய வழிமுறைகளை இளைஞர்கள் அதிகமாக சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். பல்வேறு WEBSITE உள்ளன. அவற்றில் பல்வேறு வீணான ஆட்சேபனைகள் வருகின்றன. அவற்றை உண்மையின் தூதுச் செய்தியால் நிரப்பி விடுங்கள். அறிவில் குறைவு இருந்தால் உங்களை விட பெரியவர்களாக இருப்பவர்களிடமும், முபல்லிக்களிடமும் உதவி பெறுங்கள். இன்று உலகில் வாழ்கின்ற ஒவ்வோர் இளைஞரும் இந்த பணிகளில் பங்கு பெறுபவர்களாக ஆகுவதற்கான தேவை இருக்கின்றது. அப்போது தான் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதில் உண்மையான பங்கை அவர்களால் வகிக்க முடியும். முஹம்மதிய்ய மஸீஹின் தொண்டர்களால் தான் புதிய வழிமுறைகள் மூலமாக முழு உலகிலும் ஒரு புரட்சியை உருவாக்க முடியும். எனவே இந்த விஷயத்தில் குறிப்பாக கவனம் செலுத்துங்கள்.**

**(குத்பா ஜுமுஆ 24 செப்டம்பர் 2010)**

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



7

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

### மூன்றாவது அத்தியாயம்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் தொடங்குகின்றேன்) என்ற வசனம் தொடர்பான விளக்கவுரை

அல்லாஹ் உங்களுக்கு தனது பெயர்களைப் பற்றிய ஞானத்தை வழங்குவானாக. மேலும் தனது திருப்தி மற்றும் நல்விருப்பத்தைப் பற்றிய பாதைகளின் பக்கம் வழிகாட்டுவானாக. اِسْمٌ (இஸ்முன்) என்ற சொல் وَسْمٌ (வஸ்ம்) என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அரபி மொழியில் அதன் பொருள், சூடு போட்ட காயத்தின் தழும்பு என்பதாகும். اِتَّسَمَ الرَّجُلُ (இத்தஸமர் ரஜுலு) என்று கூறினால், அந்த மனிதர் தனக்காக ஓர் அடையாளத்தை நியமித்துக் கொண்டார். அந்த அடையாளத்தின் மூலமாக பொது மக்களிடம் அவர் அறியப்படுகிறார் என்பதாகும்.

மேலும் மொழியியல் அறிஞர்களின் பார்வையில் وَسْمٌ (வஸ்முன்) என்பதிலிருந்தே سِمَتُ الْبَعِيْرِ (சிமதுல் பயீர்) மற்றும் وِسَامُ الْبَعِيْرِ (விஸாமுல் பயீர்) என்ற சொல் தோன்றி இருக்கின்றன. அதன் பொருள், ஒட்டகத்தை அடையாளம் கண்டு கொள்வதில் உதவியாக இருக்கும் வகையில் அதன் மீது சூடு போட்டு ஏதாவது வடிவத்தை உருவாக்குவது என்பதாகும். அவ்வாறே, اِنِّیْ تَوَسَّمْتُ فِيْهِ الْخَيْرَ وَمَا رَأَيْتُ الضَّيْرَ (இன்னீ தவஸ்ஸம்த்து ஃபீஹில் கைர வமா ரஅய்த்து ழ்ழைர) என்று கூறப்படுகிறது. அதாவது நான் சிந்தித்துப் பார்த்தேன். அவரது முகத்தில் நன்மைக்கான அடையாளங்களைப் பார்த்தேன். எந்தத் தீய அடையாளத்தையும் பார்க்கவில்லை. மேலும் அவரது வாழ்வில் அசுத்தத்தின் எந்தத் தாக்கமும் தென்படவில்லை. மேலும் وَسْمٌ (வஸ்முன்) என்பதிலிருந்தே وَسْمِيٌّ (வஸ்மிய்யுன்) என்ற சொல் உருவானது. அது வசந்த காலத்தின் முதல் மழை என்பதாகும். ஏனெனில் அது கடுமையாக பொழிவதன் காரணமாக நிலத்தில் தனது வெள்ளம் கடந்து செல்லும் அடையாளத்தை விட்டுச் செல்கின்றது.

அவ்வாறே أَرْضٌ مَوْسُوْمَةٌ (அர்முன் மவ்ஸூமத்துன்) என்பது எந்த நிலத்தில் வசந்த காலத்தின் முதல் மழை குறித்த நேரத்தில் பொழிந்து, நன்றாக பொழிவதனால் வேளாண்மை செய்பவர்களின் உள்ளங்களுக்கு மன அமைதியை வழங்குகிறதோ அத்தகைய நிலத்துக்குக் கூறப்படும். இந்த சொல்லிலிருந்தே مَوْسِمُ الْحَجِّ (மவ்ஸமுல் ஹஜ்), مَوْسِمُ السُّوْقِ (மவ்ஸமுஸ் ஸூக்) ஒன்று கூடும் காலங்கள் ஆகிய சொற்கள் தோன்றியுள்ளன. ஏனெனில் (மவ்ஸமுஸ் ஸூக் எனும்) அவை ஏதாவதொரு குறிக்கோளுக்காக மக்கள் ஒன்று கூடுகின்ற குறிப்பிட்ட இடங்களாகும். இந்தச் சொல்லிலிருந்தே, مِيْسَمٌ (மீஸம்) என்ற சொல் தோன்றி இருக்கிறது. அது அழகு, எழில் என்பதைக் குறிப்பிடுகிறது.

மேலும் பெரும்பாலான நிலைமைகளில் இந்தச் சொல், அழகிய பெண்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. அரபு மொழிப் பேச்சுகளையும், அரபு மொழிக் கவிதைகளையும் படிப்பதிலிருந்தும், அவை இந்தச் சொல்லை பெரும்பாலும் தனது மார்க்க, உலக நன்மைக்கான சந்தர்ப்பங்களிலேயே பயன்படுத்தி வந்தன என்பது நிரூபணமாகின்றது. பொதுமக்களின் பார்வையில், اِسْمُ الشَّيْءِ (இஸ்முஸ் ஷையி) என்பது எதன் மூலமாக ஒரு பொருள் கண்டறியப்படுகிறதோ அந்தப் பொருளின் பெயராகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் சிறப்பானவர்கள், கல்வியறிவு பெற்றவர்களின் பார்வையில் 'பெயர்' என்பது அசல் எனும் உண்மையின் நிழல் ஆக இருக்கிறது. இன்னும் கூறுவதென்றால், ஏக இறைவனிடமிருந்து பொருள்களுக்கு என்ன பெயர்கள் இருக்கின்றனவோ, அந்த அனைத்துப் பெயர்களும் அந்தப் பொருள்களுக்கு அவற்றின் வகையைக் கொண்ட நிலைகளின் தகுதியைப் பெற்றவையாக இருக்கின்றன என்பது உறுதியான விஷயமாகும். பொருள்கள் மற்றும் ஞானமிக்க அறிவுகள் எனும் பறவைகளுக்கு இந்தப் பெயர்கள் கூடுகளின் அந்தஸ்து என்ற படித்தரத்தில் இருக்கின்றன.

அவ்வாறே இந்த அருளுக்குக்குரிய வசனத்தில் اَللّٰهُ (அல்லாஹ்), اَلرَّحْمٰنُ (அர்ரஹ்மான்), اَلرَّحِيْمُ (அர்ரஹீம்) ஆகிய பெயர்கள் இருக்கின்றன. எனவே இவற்றில் ஒவ்வொரு பெயரும் அதன் சிறப்புகளையும், மறைவான தன்மைகளையும் குறிப்பிடுகின்றன. اَللّٰهُ (அல்லாஹ்) என்பது அனைத்து மேன்மைகளையும் ஒருங்கே கொண்ட அந்த இறைவனின் பெயர் ஆகும். மேலும் اَلرَّحْمٰنُ (அர்ரஹ்மான்), اَلرَّحِيْمُ (அர்ரஹீம்) ஆகிய இரண்டு பண்புகளும் எல்லா வகையான அழகு மற்றும்

கம்பீரத்தின் தொகுப்பாக இருக்கின்ற அந்தப் பெயருக்கு சான்றாக இருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகின்றன. பிறகு اَلرَّحۡمٰنُ (அர்ரஹ்மான்) என்பதன் பொருள், குறிப்பாக இதற்காகவே சிறப்பிக்கப்பட்டுள்ளதாக இருக்கின்றன. மேலும் அது اَلرَّحِیۡمُ (அர்ரஹீம்) என்பதில் காணப்படுவதில்லை. அது என்னவெனில், கருணையுள்ள இறைவனின் கட்டளையால், ரஹ்மான் என்ற பண்பு மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் தொன்மையான காலத்திலிருந்தே இறைவனின் ஞானம் எனும் எதிர்பார்ப்பிற்கும், ஒவ்வொரு தகுதியடைந்தவரின் தகுதிக்கும் ஏற்ப அருளை கொடுத்துக் கொண்டிருக்கின்றதே தவிர சரிசமமான விநியோகமாக அல்ல.

இந்த ரஹ்மானிய்யத் என்ற பண்பில் எந்த மனிதனுடைய அல்லது உயிரினத்தினுடைய ஆற்றல்களின் சம்பாதிப்புக்கும், செயலுக்கும், முயற்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மாறாக, இது அல்லாஹ்வின் பேரருள் மட்டுமே ஆகும். அதற்கு முன்பு செயலாற்றுபவர்களின் செயல் இருப்பதில்லை. இது அவனிடமிருந்து அவனுடைய பொதுவான அருள் ஆகும். எந்தவொரு குறைபாடுள்ள மனிதரின் அல்லது முழுமையான மனிதரின் எந்தவொரு முயற்சியின் விளைவு அல்ல. சுருக்கமாக, ரஹ்மானிய்யத் என்ற பண்பின் அருள் என்பது எந்த செயலின் விளைவோ அல்லது எவருடைய உரிமையின் கனியோ அல்ல. மாறாக, அது கட்டுப்படுவது அல்லது எதிர்ப்பது ஆகியவை அல்லாமல் அல்லாஹ்வின் அருளால் மட்டுமே ஆகும். மேலும் இந்த அருள் என்பது கட்டுப்படுவது, இறைவணக்கம் செய்வது, இறையச்சம், தூய்மை ஆகிய நிபந்தனையின்றி அல்லாஹ்வின் விருப்பத்தினாலும், அவனுடைய எண்ணத்தினாலும் எப்போதும் இறங்குகிறது. இதன் காரணமாகவே, இந்த அருள் இருப்புகளின் எல்லாத் தகுதிகளிலும் காலத்திலும், இடத்திலும், கட்டுப்படுவது, மாறு செய்வது ஆகிய எல்லா நிலைமையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றாலும் கூட, இந்த அருளின் அடையாளங்கள் மனிதனுடைய இருப்பு, உயிரினங்களின் இருப்பு ஆகியவற்றின் அடையாளங்களுக்கும் முன்பே காணப்படுகின்றன.

அல்லாஹ்வின் رَحۡمٰنِیَّت (அருள்) என்பது நல்லவர்கள், அநீதியிழைப்பவர்கள் ஆகிய அனைவரையும் சூழ்ந்துள்ளது என்பதை நீங்கள் பார்ப்பதில்லையா? அவனது சந்திரனும், சூரியனும் கட்டுப்படுவர்கள், கட்டுப்படாதவர்கள் ஆகிய அனைவரின் மீதும் உதிக்கின்றது. மேலும் (அல்லாஹ் ஆகிய) அவன் ஒவ்வொன்றையும் அதற்குப் பொருத்தமான பிறப்பை வழங்கினான். மேலும் அவற்றின் எல்லா விஷயங்களையும் பொறுப்பேற்றுக் கொண்டான். நடக்கின்ற, திரிகின்ற எல்லா உயிரினங்களும், அவை வானங்களில் இருந்தாலும் அல்லது பூமியில் இருந்தாலும் அவற்றிற்கான வாழ்வாதாரம் அல்லாஹ்விடமே இருக்கிறது. அவன் அவர்களுக்காக மரங்களை உருவாக்கினான். மேலும் அந்த மரங்களின் மூலமாக கனிகளையும், மலர்களையும், நறுமணங்களையும் படைத்தான். இது எத்தகைய கருணை என்றால், இதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் ந..்ப்ஸுகளுக்காக அவற்றைப் படைப்பதற்கு முன்பே செய்து விட்டான். இதில் இறையச்சம் கொண்டவர்களுக்கு அறிவுரை இருக்கிறது.

இந்த எல்லா அருட்கொடைகளும் செயல்களின்றியும், உரிமை கொண்டிராமலும் மிகவும் கருணையாளனும், நன்கு படைப்பாளனுமாகிய அல்லாஹ்விடமிருந்து வழங்கப்பட்டுள்ளன. பெருமைக்குரிய இறைவனின் சார்பாக இத்தகைய இன்னும் பல அருட்கொடைகள் இருக்கின்றன. அவை எண்ணிலடங்காதவையாகும். எடுத்துக்காட்டாக, சுகத்திற்கான காரணிகளை படைப்பது, எல்லா வகையான நோய்களுக்கும் அனைத்து திட்டங்களையும் மருந்துகளையும் உருவாக்குவது, இறைதூதர்களை அனுப்புவது, நபிமார்களின் மீது இறைநூல்களை இறக்குவது ஆகிய இவை அனைத்தும் நமது اَرۡحَمُ الرّٰحِمِیۡنَ (அர்ஹமுர் ராஹிமீன் - கருணை காட்டுபவர்களிலெல்லாம் மிக்க கருணை காட்டுபவன்) ஆகிய இறைவனின் ரஹ்மானிய்யத் ஆகும். இது அவனுடைய தூய்மையான அருள் ஆகும். இதில் செயல்படுபவரின் எந்த செயலுக்கும், எந்த மன்றாடுதலுக்கும், துஆவுக்கும் தொடர்பு இல்லை.

மேலும் رَحِیۡمِیَّتۡ (ரஹீமிய்யத்) என்பது எத்தகைய அருள் என்றால், அது, رَحۡمٰنِیَّت (ரஹ்மானிய்யத்) என்ற இறையருள்களை விட்டும் மிக, மிகத் தனிச் சிறப்பானதாகும். மேலும் மனித குலத்தை முழுமை செய்வதற்காவும், மனித இயல்பை முழுமை வரை சென்றடைய வைப்பதற்காகவும் தனித்தன்மை வாய்ந்ததாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் رَحِیۡمِیَّتۡ (ரஹீமிய்யத் எனும் இறைவனின் தனித்தன்மை வாய்ந்த அருளாகிய) அதைப் பெறுவதற்கு முயற்சி, பொருத்தமான நிலைக்கேற்ற செயல், மன உணர்ச்சிகளை முற்றிலும் விட்டு விடுவது ஆகியவை நிபந்தனையாக்கப்பட்டுள்ளது. இன்னும் கூறுவதென்றால், இந்த அருள் செயல்களில் முழுமையான முயற்சி, மனதைத் தூய்மைப்படுத்துவது, வெளிக் காட்டுதல் என்பதன் விளைவுகளை வெளியே எடுத்து கலப்பற்ற தன்மையை முழுமை வரை எட்ட வைப்பது, மனதைத் தூய்மைப்படுத்துவது, கம்பீரமான இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக மரணத்திற்கு முன்னுரிமை கொடுப்பது ஆகியவற்றிற்குப் பிறகுதான் உண்மையான முறையில் இறங்குகிறது. எனவே இந்த அருட்கொடைகளிலிருந்து நற்பேற்றைப் பெறுபவர் மிகவும் அதிஷ்டசாலி ஆவார். இன்னும் கூறுவதென்றால், அவர்தானே உண்மையில் மனிதர் ஆவார். மேலும் அவரைத் தவிர மற்றவர்களெல்லாம் வெறும் கால்நடைகளைப் போன்றவர்களாவர்.

இங்கு ஒரு சிக்கலான கேள்வி இருக்கிறது. அறிவுடையவர் அது பற்றி சிந்திக்க இயலும் வகையில் அதை நாம் இந்த நூலில் அதற்கான விடையுடன் எழுதுகிறோம். அது என்னவெனில், திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, அல்லாஹ்வின் மகத்தான பண்புப் பெயர் எல்லா முழுமையான பண்புகளுக்கும் உரியதாக இருக்கும் நிலையில், அதுவும் பண்புகளை அதிகமாக ஓதும் நேரத்தில் அருள்கள் அதிகமாக இருப்பது கட்டாயமானது என்று இருக்கும் நிலையில், بِسۡمِ اللّٰهِ (பிஸ்மில்லாஹ்) என்பதில் அல்லாஹ் தனது எல்லாப் பண்புகளிலிருந்து اَلرَّحۡمٰنُ (அர்-ரஹ்மான்), اَلرَّحِیۡمُ (அர்-ரஹீம்) ஆகிய இரண்டு பண்புகளை மட்டும் ஏன் தேர்ந்தெடுத்திருக்கிறான்? மற்ற பண்புகளை இந்த வசனத்தில் ஏன் குறிப்பிடவில்லை? பிறகு பண்புகள் அதிகமாக இருப்பது என்பது, ஓதும் நேரத்தில் அருள்களை

அதிகமாக்குவதற்கு அவசியமாக இருக்கின்றது. எனவே بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ (பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்) என்ற வசனம் இந்த அந்தஸ்திற்கும், தகுதிக்கும் அதிக உரிமையுடையதாக இருக்கிறது. மேலும் ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, ஒவ்வொரு வேலையைச் செய்யும் நேரத்திலும் بِسْمِ اللهِ (பிஸ்மில்லாஹ்) ஓதுமாறு ஆர்வமூட்டப்பட்டிருக்கிறது. முஸ்லிம்களின் நாவுகளில் அனைத்தையும் விட அதிகமாக இந்த வசனம் மீண்டும் மீண்டும் ஓதப்படுகிறது. மேலும் கண்ணியமிக்க இறைவனின் நெறிநூலில் எல்லாவற்றையும் விட அதிகமாக இதுவே திரும்பத் திரும்ப வந்திருக்கிறது. அவ்வாறு இருக்கும்போது, வேறு எந்த நோக்கத்தின் காரணமாக இந்த அருளுக்குரிய வசனத்துடன் மற்ற பண்புகள் எழுதப்படவில்லை என்பதாகும்.

இதற்குரிய விடை என்னவெனில், அல்லாஹ் இந்த இடத்தில் தனது எல்லா மகத்தான பண்புகளின் முழுமையான முறையில் சுருக்கமாக இருக்கின்ற அந்த இரண்டு பண்புகளைக் குறிப்பிட்டிருக்கிறான். மேலும் அந்த இரண்டு பண்புகள் اَلرَّحْمٰنُ (அர்-ரஹ்மான்) மற்ற اَلرَّحِيْمُ (அர்-ரஹீம்) ஆகும். சரியான அறிவும் இதன் பக்கம் வழிகாட்டுகிறது. ஏனெனில் இந்த உலகில் அல்லாஹ் சில நேரத்தில் مَحْبُوْبِيَّتْ (மஹ்பூபிய்யத் - நேசம் கொள்ளப்படுபவனாகும் நிலை) என்ற மகத்துவத்துடன் தோற்றமளிக்கின்றான் மேலும் சில நேரத்தில் مُحِبِّيَّتْ (முஹிப்பிய்யத் - நேசம் கொள்பவன்) என்பதன் வடிவத்தில் தோற்றமளிக்கிறான். மேலும் அவன் இந்த இரண்டு பண்புகளையும் رُبُوْبِيَّتْ (ருபூபிய்யத் - படைத்து பரிபாலிப்பது) எனும் சூரியன் மூலமாக عُبُوْدِيَّتْ (உபூதிய்யத் - அடியானாக இருப்பது) எனும் பூமியில் இறங்கும் அத்தகைய ஒளியாகக் குறிப்பிட்டிருக்கிறான்.

எனவே இவ்வாறு சில நேரத்தில் رَبّ (ரப் - பரிபாலிப்பவன்) என்பவன் مَحْبُوْبٌ (மஹ்பூப் - அன்பு செலுத்தப்படுபவன்) ஆகி விடுகிறான். மேலும் அடியார் مَحْبُوْبٌ (மஹ்பூப் - அன்பு செலுத்தப்படுபவன்) ஆகிய அ(ந்த இறை)வனுக்கு مُحِبٌّ (முஹிப் - அன்பு செலுத்துபவர்) ஆகி விடுகிறார். மேலும் இன்னும் சில நேரத்தில் அடியார் ஆகிய அவர் مَحْبُوْبٌ (மஹ்பூப் - அன்பு செலுத்தப்படுவர்) ஆகி விடுகிறார். மேலும் رَبّ (ரப் - பரிபாலிப்பவன்) அடியாரின் مَحْبُوْبٌ (மஹ்பூப் - அன்பு செலுத்தப்படுபவன்) ஆகி விடுகின்றான். மேலும் (இறைவன் ஆகிய) அவன் அவரை தனது குறிக்கோளாக ஆக்கிக் கொண்டு விடுகிறான். அன்பு, நட்பு, உருக்கமான மனம் ஆகியவை மனித இயல்பில் வைக்கப்பட்டுள்ளன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தனது ஓர் அன்பன் தனது தோற்றங்கள், அழகு, அருள், பேரருள் ஆகியவற்றின் மூலமாக தன் பக்கம் ஈர்ப்பதையும், அபாயங்கள், சீர்குலைந்த நிலைமைகளில் அவருக்கு உதவி செய்வதற்காக வந்து நிற்கின்ற, அவருடைய துக்கத்தில் இணைகின்ற அத்தகைய நேசம் காட்டுபவன் இருக்க வேண்டும் என்பதையும், செயல்கள் வீணாவதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதையும், அதை அதன் விருப்பங்கள் வரை கொண்டு செல்ல வேண்டும் என்பதையும் இயல்பு எதிர்பார்க்கிறது. எனவே எவருடைய இயல்பு அதை எதிர்பார்க்கிறதோ அதை அல்லாஹ் கொடுக்க வேண்டும் எனவும், தனது பரந்த வழங்குதலினால் அவர் மீது அருளை நிறைவு செய்ய வேண்டும் எனவும் அவன் விரும்பினான். எனவே அவன் ரஹ்மான், ரஹீம் ஆகிய தனது இரண்டு பண்புகளுடன் அவர் மீது தோற்றமளித்தான்.*

இந்த இரண்டு பண்புகளும் رُبُوْبِيَّتْ (ருபூபிய்யத் - படைத்து பரிபாலிப்பது) மற்றும் عُبُوْدِيَّتْ (உபூதிய்யத் - அடியானாக இருப்பது) ஆகியவற்றுக்கிடையிலான ஒரு தொடர்பாக இருக்கிறது; மேலும் இந்த இரண்டின் மூலமாக இறைநெருக்கத்தைத் தேடுவது மற்றும் மனித ஞானங்கள் ஆகியவற்றின் வட்டம் முழுமையடைகிறது.

எனவே இவற்றைத் தவிர எஞ்சிய எல்லா பண்புகளும் (ரஹ்மான், ரஹீம் ஆகிய) இந்த இரண்டு பண்புகளின் ஒளிகளில் அடங்கியுள்ளன. மேலும் இவ்விரண்டு கடல்களின் துளிகளாக இருக்கின்றன. பிறகு அல்லாஹ் மனித குலத்திற்கு مَحْبُوْبٌ (நேசிக்கப்பட்டவன்) ஆகவும், مُحِبٌّ நேசிக்கக் கூடியவன்) ஆகவும் இருப்பது அவசியமாக இருப்பதைப் போன்றே, தன் முழுமையான அடியார்களும் மனித குலத்திற்காக நல்லொழுக்கத்திலும், இயல்பிலும் (அல்லாஹ் ஆகிய) அவனைப் போன்று ஆகிவிட வேண்டும் என்று அவன் விரும்புகிறான். மேலும் அவர்கள் عُبُوْدِيَّتْ (உபூதிய்யத் - அடியானாக இருப்பது), رُبُوْبِيَّتْ (ருபூபிய்யத் - படைத்து பரிபாலிப்பது) ஆகியவற்றின் ஒழுக்கங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், மனித வளர்ச்சியின் எந்தக் குறையும் எஞ்சியிருக்கக் கூடாது என்பதற்காகவும் இந்த இரண்டு பண்புகளையும் (அவர்கள்) தனக்காக ஆடையாகவும், உடையாகவும் உருவாக்க வேண்டும் என்றும் (அல்லாஹ் ஆகிய) அவன் விரும்பியிருக்கிறான்.

இதற்காகவே அல்லாஹ் நபிமார்களையும் தூதர்களை -யும் படைத்தான். மேலும் அவர்களில் சிலரை தனது ரஹ்மான் (அருள் பாலிப்பவன்) என்ற பண்பின் தோற்றமாகவும், இன்னும்

---

*அல்லாஹ் தனது ரஹ்மான் என்ற பண்புடன் ஒவ்வொரு மனிதனுக்கும், விலங்கிற்கும், மறுப்பாளருக்கும், நம்பிக்கை -யாளருக்கும் தனது பல வகையான பேரருள்களையும், கருணைகளையும் இறக்குகின்றான் என்பதை நீர் அறிவீர். நற்கூலி, தண்டனையைக் கொடுக்கின்ற எஜமானனின் சந்நிதியில் அவர்களின் எந்தவொரு செயலுமின்றி, அவன் அவர்களை அவற்றிற்கு உரியவர்களாக ஆக்குகின்றான். இந்த வகையில் பேரருள் புரிவது என்பது பேரருள் புரிந்தவனை உடனே நேசத்திற்குரியவனாக ஆக்கி விடுகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே ரஹ்மானிய்யத்தின் வழிமுறையில் அருளை வழங்குபவன் அருளைப் பெறக் கூடியவர்களின் பார்வைகளில் அவனுடைய مَحْبُوْبِيَّتْ (மஹ்பூபிய்யத் - நேசம் கொள்ளப்படுபவனாகும் நிலையி)-ன் மகத்துவத்தை வெளிப்படுத்துகிறது என்பதும், ரஹீமிய்யத்தின் பண்பு என்பது தன்னைத் தானே مُحِبِّيَّتْ (முஹிப்பிய்யத் - நேசம் கொள்பவன்) என்ற மகத்துவத்துடன் அவசியமாக்கிக் கொண்டு விட்டது என்பதும் நிரூபணமாகி விட்டது. எனவே நம்பிக்கை கொண்டவர்களில் யாராவது ஒருவருக்கு, அவர் அவனுடன் நேசம் கொள்ளும் போதும், சொல் அளவிலும், செயல் அளவிலும் அவன் மீது திருப்தி கொள்ளும் போதும் மட்டுமே அந்த அருளின் தோற்றத்தை (அல்லாஹ் ஆகிய) அவன் வெளிப்படுத்துகிறான் - நூலாசிரியர்.

சிலரை தனது ‘ரஹீம்’ (மீண்டும் மீண்டும் கருணை செய்பவன்) என்ற பண்பின் தோற்றமாகவும் ஆக்கினான். அவர்களும் مَحْبُوْبٌ (மஹ்பூப் - நேசிக்கப்படுபவர்) ஆகுவதற்காகவும், مُحِبٌّ (முஹிப் - நேசிக்கக்கூடியவர்) ஆகுவதற்காகவும், அவனுடைய மகத்தான அருளுடன் ஒருவர் மற்றவருடன் அன்புடன் வாழ்க்கை நடத்துவதற்காகவும், அவன் அவ்வாறு ஆக்கினான். எனவே அவன் சிலருக்கு مَحْبُوْبِيَّتْ (மஹ்பூபிய்யத் - நேசம் கொள்ளப்படுபவது) என்ற பண்பிலிருந்து பெரும் பகுதியை வழங்கினான் இன்னும் சிலருக்கு مُحِبِّيَّتْ (முஹிப்-பிய்யத் - நேசம் கொள்வது) என்ற பண்பிலிருந்து ஏராளமான பகுதியை வழங்கினான். அவ்வாறே இறைவன் தனது பரந்த அருளாலும், நிரந்தரமான கருணையாலும் விரும்பினான்.

பிறகு காத்தமுன்னபிய்யீன் மற்றும் சய்யிதுல் முர்ஸலீன் சய்யிதுனா முஹம்மது (ஸல்) அவர்களின் காலம் வந்தபோது, அல்லாஹ் சுப்ஹானஹு இந்த இரண்டு பண்புகளையும் ஒரு ந.்.ப்ஸில் ஒன்று சேர்த்து விட விரும்பினான். எனவே அவன் இந்த இரண்டு பண்புகளையும் நபி (ஸல்) அவர்களிடம் ஒன்று சேர்த்து விட்டான். நபி (ஸல்) அவர்கள் மீது இலட்சக்கணக்கான சலவாத்தும், சலாமும் உண்டாவதாக. இதன் காரணமாகவே இறைவன், இந்த (.்.பாத்திஹா) சூராவின் துவக்கத்திலேயே இந்த விருப்பத்தின் பக்கம் சைகை உருவாக வேண்டும் என்பதற்காக مَحْبُوْبِيَّتْ (மஹ்பூபிய்யத் - நேசம் கொள்ளப்பட்டிருப்பது) மற்றும் مُحِبِّيَّتْ (முஹிப்பிய்யத் - நேசம் கொள்வது) ஆகிய பண்பு-களைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளான்.

மேலும் அவன் இந்த வசனத்தில் தனது பெயரை ரஹ்மான் மற்றும் ரஹீம் என்று வைத்திருப்பது போன்று, அவன் நம் நபி (ஸல்) அவர்களின் பெயரையும் முஹம்மது என்றும் அஹ்மது என்றும் வைத்துள்ளான். இது, நிழலான முறையில் சய்யிதுனா خَيْرُ الْبَرِيَّۃِ (கைருல் பரிய்யா - மக்களில் மிகச் சிறந்தவர்) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர வேறு யாரும் இந்த இரண்டு பண்புகளையும் ஒருங்கே பெற்றிருக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும் இந்த இரண்டு பண்புகளும் அல்லாஹ்வின் எல்லா பண்புகளிலும் மிகப் பெரிய பண்புகள் ஆகும் என்பதை நீர் அறிந்துள்ளீர். இன்னும் கூறுவதாயின், இந்த இரண்டும் அல்லாஹ்வின் அனைத்து பண்புப் பெயர்களின் சாராம்சமும் உண்மைகளின் அசல் நிலையும் ஆகும். மேலும் இவை முழுமையை வேண்டுகின்ற, இறைவனின் பண்புகளை மேற்கொள்ள விரும்புகின்ற ஒவ்வொருவரின் முழுமைத்தன்மையை அளக்கும் அளவுகோல்கள் ஆகும். மேலும் இந்த இரண்டு பண்புகளிலிருந்தும் முழுமையான பகுதி, நுபுவ்வத் தொடரின் காத்தம் (முத்திரை) ஆக இருக்கின்ற நம் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அந்த நபி (ஸல்) அவர்களுக்கு இந்த இரு பண்புகளைப் போன்று ஈருலகத்தின் இறைவனின் அருளால் இரண்டு பெயர்கள் வழங்கப்-பட்டிருப்பதற்கு இதுவே காரணமாகும். அவற்றில் முதல் பெயர் ‘முஹம்மது’ என்பதாகும்; இரண்டாவது பெயர் ‘அஹ்மது’ என்பதாகும்.

முஹம்மது என்பதைப் பொருத்தவரை, இந்தப் பண்பு ரஹ்மான் எனும் போர்வையைப் போர்த்தி இருக்கிறது. மேலும் கம்பீரம் மற்றும் مَحْبُوْبِيَّتْ (மஹ்பூபிய்யத் - நேசம் கொள்ளப்-பட்டிருப்பது) எனும் ஆடையில் தோற்றமளிக்கிறது. மேலும் நபி (ஸல்) அவர்களின் நன்மை மற்றும் பேருதவி ஆகியவற்றின் காரணமாக புகழப்பட்டுள்ளது. மேலும் அஹ்மது என்ற பெயர், நம்பிக்கை கொண்டவர்களின் உதவிக்கும் ஒத்தாசைக்கும் காப்பாளனாக இருக்கின்ற இறைவனின் அருளால் رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத் - கருணையக் கொண்டிருப்பது), مُحِبِّيَّتْ (முஹிப்பிய்யத் - நேசம் கொள்வது), அழகு ஆகிய ஆடைகளில் தோற்றமளித்தது. நம் நபி முஹம்மது (ஸல்) அவர்களின் (முஹம்மது, அஹ்மது ஆகிய) இந்த இரு பெயர்களும் நமது பேரருள் புரிபவனாகிய இறைவனின் (ரஹ்மான், ரஹீம் ஆகிய) இரண்டு பண்புகளுக்கு ஏற்றவையாக இருக்கின்றன. அவை எதிரும் புதிருமான இரண்டு கண்ணாடிகள் வெளிப்படுத்துகின்ற அந்த பிரதிபலிக்கும் வடிவங்களைப் போன்றவையாகும்.

(தொடரும்...)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“இது உமது கல்லறையின் இடமாகும் என ஓர் இடம் எனக்குக் காட்டப்பட்டது. ஒரு வானவர் நிலத்தை அளந்து கொண்டிருப்பதை நான் கண்டேன். அப்போது ஓர் இடத்தை அடைந்ததும், இது உமது கல்லறையின் இடமாகும் என அவர் என்னிடம் கூறினார். பிறகு ஓரிடத்தில் எனக்கு ஒரு கல்லறை காட்டப்பட்டது. அது வெள்ளியை விடவும் அதிகமாக பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த இடத்து மணல் எல்லாம் வெள்ளியாகவே இருந்தது. அப்போது என்னிடம், உமது கல்லறை எனக் கூறப்பட்டது. இன்னோர் இடமும் எனக்குக் காட்டப்பட்டது. அதற்கு ‘பெஹிஷ்தி மக்பரா’ (சுவர்க்கத்திற்குரியவர்களின் கல்லறை) எனப் பெயர் வைக்கப்பட்டது. அது சுவர்க்கம் செல்லக்கூடிய ஜமாஅத்திலுள்ள அந்த தூய மக்களின் கல்லறைகள் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.”

(நூல்: ‘உயில்’ பக்கம் 28, 29)

# எல்லாரிடமும் அன்பு எவரிடமும் இல்லை வெறுப்பு

கியானி முபஷ்ஷிர் அஹ்மத் காதிம் [ஆசிரியர், ஜாமிஆ அஹ்மதிய்யா, காதியான்]

தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

Mayor of City Frankston Sandra என்பவர் தன்னுடைய உரையில் இவ்வாறு கூறுகிறார்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின், 'எல்லாரிடமும் அன்பு; எவரிடமும் இல்லை வெறுப்பு' என்ற மிகவும் அழகான போதனையானது நமக்கு முன்னால் உள்ளது. இந்த தூதுச் செய்தியுடன் உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் இணைந்து விட்டால் மேலும் அதற்கேற்ப தன்னுடைய வாழ்வை கழித்தால் உலகில் போர்கள் முற்றுப்பெற்று விடும். மேலும் உலகில் அமைதி மற்றும் சமத்துவம் நிலைபெற்று விடும்.




இதேபோன்று Honourable Judtha Girale (Member of Parliament Australia) தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தியவாறு கூறுகிறார்கள்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் 'எல்லாரிடமும் அன்பு; எவரிடமும் இல்லை வெறுப்பு' என்ற இந்த தூதுச் செய்தி அனைத்தையும் விட அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும் இந்த அன்பிற்குரிய தூதுச் செய்தி ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தூதுச் செய்தியை அதிகதிகமான மக்கள் வரை எட்ட வைக்க வேண்டும் என்பது என் விருப்பமாகும். (பதர் பத்திரிகை டிசம்பர் 19, 2013 பக்கம் 54)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய ஆன்மிக தலைவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 'எல்லாரிடமும் அன்பு; எவரிடமும் இல்லை வெறுப்பு' என்ற இந்த போதனை ஒன்றும் ஒரு புதிய போதனை அல்ல. மாறாக இது இஸ்லாத்தின் அடிப்படை போதனை ஆகும். மேலும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள போதனையாகும். (பதர் வார பத்திரிகை ஏப்ரல் 2017)

இன்று உலகம் வெறுப்பு மற்றும் பாரபட்சம் நிறைந்த மிகவும் அபாயகரமான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. உலகப் பொருளாதார நெருக்கடி, வெறுப்பு மற்றும் அநீதியின் காரணமாக உலகம் முன்பை விட அதிக ஆபத்துகளைச் சந்தித்து வருகிறது. இந்த நாட்கள் இரண்டாம் உலகப் போருக்கு மிக அருகில் இருப்பதாகக் கருதப்பட்டு அதனுடன் ஒப்பிடப்படுகின்றன. உலக சக்திகள் தனிச்சையாகச் செயல்படுகின்றன. உலகில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டும் சாக்கில் உள்நாட்டுப் போர்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள், மேலும் உலகின் பெரிய சக்திகளும் அவற்றில் தலையிடுகின்றன. ஏழை நாடுகளின் மீது செய்யப்படும் அடக்குமுறை மற்றும் அநீதி காரணமாக, இவை அனைத்தும் உலகை மூன்றாம் உலகப் போரை நோக்கி வேகமாக இட்டுச் செல்கின்றன என்பதைக் குறிக்கின்றன. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆன்மிக தலைவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக இந்த ஆபத்துகள் குறித்து உலகிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள். மேலும் உலகம் இந்த சூழ்நிலைகளில் இருந்து எவ்வாறு தப்பிக்க முடியும். அதை எவ்வாறு அழிவிலிருந்து காப்பாற்ற முடியும் என்பதை அன்புடனும் நேசத்துடனும் உலகிற்கு விளக்கி வருகிறார்கள்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆன்மிக தலைவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் இவ்வாறு அறிவித்துள்ளார்கள்:

உலகம் அமைதியையும் நல்லிணக்கத்தையும் அடைவதற்கு நீதியின் பாதை மட்டுமே ஒரே வழியாகும். மேலும் நீதியின் பாதையை ஏற்றுக் கொண்டு, நமது படைப்பாளரிடம் பணிவாகவும் அடக்கமாகவும் வருவதாகும். அதேபோல், மனிதகுலத்தை அன்பு, நேசம் மற்றும் கருணையுடன் நடத்துவது, பலவீனமானவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் உதவுவது, அவர்களை மதிப்பது, அவர்களை கௌரவிப்பது, அவர்களின் துக்கங்களுக்கு அனுதாபம் கொள்வது, உண்மை மற்றும் இறையச்சத்தின் பாதையைப் பின்பற்றுவது, அன்பு, நேசம், புரிதல் மற்றும் நேர்மையுடன் நமது படைப்பாளனுடன் ஒரு உறவை உருவாக்குவது மட்டுமே இந்த பேரழிவுகளைத் தவிர்க்க ஒரே வழியாகும்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தனது உரை ஒன்றில் மிகுந்த வேதனையுடன் இவ்வாறு கூறுகிறார்கள்: அதன் சுருக்கம் என்னவென்றால், கடந்த இரண்டு உலகப் போர்களின் அபாயகரமான பேரழிவுகளை நாம் அனைவரும் நன்கு அறிவோம். பல நாடுகளின் செயல்களின் விளைவாக,

மற்றொரு உலகப் போரின் தடயங்களும் அறிகுறிகளும் உலக அரங்கில் தோன்றி வருகின்றன. இப்போது நடக்கவிருக்கும் போர் அணு ஆயுத போராக இருக்கும். இந்த சூழ்நிலையில், உலகில் எத்தகைய போர் வெடிக்கும் ஆபத்து இருக்கின்றது என்றால் இந்தப் போரின் பேரழிவினால் ஏற்படும் விளைவுகளைத் தவிர்க்க விரும்பினால், நாம் நீதியையும் நேர்மையையும் மேற்கொள்ள வேண்டும், மேலும் வெறுப்பைத் தூண்டிவிட்டு உலக அமைதியை அழிக்கவும் பாழாக்கவும் முனைபவர்களுக்கு எதிராக நாம் ஒற்றுமையாக நின்று அவர்களை தடுக்க வேண்டும். (பத்ர் 2013)

மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறியதன் சுருக்கத்தை நான் என்னுடைய வார்த்தைகளில் கூறுகின்றேன்: ஹுஸூர் கூறுகிறார்கள்:

உலகத்திலிருந்து வெறுப்பு மற்றும் தப்பெண்ணத்தை ஒழிக்க அனைவரும் தங்கள் அனைத்து முயற்சிகளையும் பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த முயற்சியில் நாம் வெற்றி பெற்றால், இந்த வெற்றி நமது எதிர்கால சந்ததியினருக்கு பிரகாசமான எதிர்காலத்திற்கான உத்தரவாதமாக அமையும். நாம் தோல்வியுற்றால், நமது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் நமது தவறான செயல்களின் விளைவாக அணு ஆயுதப் போரால் பேரழிவையும் சந்திக்கும். அணு ஆயுதப் போரின் விளைவாக பரவும் தொடர்ச்சியான அழிவு மற்றும் பேரழிவின் பரிசை நமது எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவோம். உலகில் உலகளாவிய அழிவை ஏற்படுத்திய தங்கள் மூதாதையர் -களை இந்த தலைமுறையினர் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

இதே போன்று, அன்னார் இன்னோரிடத்தில் கூறுகிறார்கள்: அதன் சுருக்கம் என்னவென்றால், ஓர் அஹ்மதி இந்த கொடுமைகள் மற்றும் பேரழிவுகள் வருவதற்கு முன்பே உலகம் காப்பாற்றப்பட வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். இந்த பேரழிவு ஏற்பட்டால், அதன் தீய விளைவுகளிலிருந்தும் நாம் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் துஆ செய்ய வேண்டும். நாம் வேறு என்ன செய்ய முடியும்? நம் முன் இருளைக் காணும்போது, இந்த இருளைத் தவிர்க்க மற்றவர்களையும் எச்சரிக்கிறோம். இப்போது, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இருப்பு மட்டுமே உலகைக் காப்பாற்ற முடியும் இந்த மக்களுக்குள் சில உணர்வுகளை உருவாக்க முடியும். அல்லது இந்த மக்களுக்கு அதை விளக்குவதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளை வெற்றிகரமாக்க முடியும். இதன் காரணமாகத்தான் நான் ஓர் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, உலகத் தலைவர்களுக்கு அவர்கள் முன்வந்து உலகை அழிவு மற்றும் பேரழிவிலிருந்து காப்பாற்ற முயற்சிகளை மேற்கொள்ளவும் என்று நான் கடிதங்கள் எழுதினேன். மேலும் தங்கள் படைப்பாளனைப் புறக்கணிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டேன், ஆனால் அவர்கள் இதில் கவனம் செலுத்தவில்லை. அவர்கள் உலக விவகாரங்களில் சிக்கியிருப்பதையும் புரிந்து கொள்ளவில்லை. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணை மட்டுமே அவர்களைக் காப்பாற்ற முடியும். எதிர்காலம் எப்படி இருக்கும் என்று யாராலும் நூறு சதவீதம் உறுதியாகக் கூற முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் நாடினால், வரவிருக்கும் அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றுவான் என்றும், அல்லாஹ் வேறு ஏதாவது எண்ணியிருந்தால், மனிதகுலத்தின் பெரும் பகுதியை அழிக்கக்கூடிய வரவிருக்கும் பயங்கரமான தண்டனையில் இருந்து நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று மட்டுமே நாம் துஆ செய்ய முடியும். (சுருக்கம், பத்ர் பத்திரிகை, மே 9, 2020)



உலகில் அமைதி, நேசம் மற்றும் சமத்துவத்தை பரப்புவதற்கான உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஏதாவது இருக்கும் என்றால் அது கிலா∴பத் மட்டுமே ஆகும். அஹ்மதிய்யா கிலா∴பத்தில் இணைவதன் மூலம் மட்டுமே இன்று உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய ஆன்மிக கலீ∴பா ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அமைதி மற்றும் சமத்துவத்தை பரப்புவதற்காக முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

உலகில் அமைதியை எவ்வாறு நிலைநாட்ட முடியும் என்பது குறித்து, அன்னாரின் ஆக்கப்பூர்வமான அறிவுரைகளைக் கேட்டு, மேலும் இதற்காக ஹுஸூர் அவர்கள் வெளிப்படுத்திய அனுதாபத்தைக் கண்டு உலகம் அவர்களைப் பாராட்டுகிறது. இவ்வாறு Paidobath Spain Ex. Mayor மெங்கல் கார்சியா, என்பவர் உலகில் அமைதியை நிலைநாட்ட ஹுஸூர் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டியவாறு இந்த ஜமாஅத் அதன் நோக்கங்களில் வெற்றி பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று கூறுகிறார். ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் சொற்களாலும், அன்னாரின் பேச்சாலும் நான் மிகவும் ஈர்க்கப்பட்டுள்ளேன். போர்கள், சண்டைகள் மற்றும் குழப்பங்களை முடிவுக்குக் கொண்டு வருவது, அமைதியான சமூகத்தை நிறுவுவது தொடர்பாகவும் மேலும் தாங்கள் அதற்கான கூறிய தீர்வை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். அஹ்மதியா ஜமாஅத்தின் ஆன்மிக கலீ∴பா நீதி, அன்பு, பணிவு மற்றும் கண்ணியம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சமூகத்தை நிறுவுவதற்கு பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த மக்களை ஒரே இடத்தில் ஒன்றிணைத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாம் வேறுபாடுகள் நிறைந்த ஓர் உலகில் வாழ்கின்றோம். சில நாடுகள் வளர்ச்சியை அடைகின்றன. உலகின் பல மக்கள்

பசி மற்றும் வறுமையால் இறந்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய சூழலில், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது ஆன்மிக கலீ∴பா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகில் அன்பையும் அமைதியையும் நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சியை நாம் பாராட்டுகிறோம். இந்த முயற்சிகள் தான் இன்று உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கான உத்தரவாதமாகும்.

இதேபோல், சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள ஹாவர்ட் இன்டர் ∴பெய்த் இன்டர்நேஷனலின் பிஷப்பும், ∴பீட் அண்ட் ∴பேமிலி என்ற சமூக சேவை அமைப்பின் நிறுவனருமான டாக்டர் அய்மன், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் அமைதி மற்றும் நல்லிணக்க முயற்சிகளைப் பாராட்டி, இந்த நபர் ஒரு மந்திரவாதி அல்ல. ஆனால் அவரது வார்த்தைகள் மந்திரத்தின் தாக்கத்தை தனக்குள் கொண்டுள்ளன. அவர் மெதுவாகப் பேசுகிறார். ஆனால் அவரது அருளுக்குரிய நாவிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் தனக்குள் மிகுந்த ஆற்றலை கொண்டுள்ளது. என் வாழ்நாள் முழுவதும் இப்படிப்பட்ட துணிச்சலான மற்றும் தைரியமான நபரை நான் கண்டதில்லை என்று கூறினார்.




மேலும் அந்த டாக்டர், இஸ்லாத்தைப் பற்றிய எந்த நல்ல எண்ணங்களும் என் உள்ளத்தில் இதற்கு முன்பு இருந்ததில்லை. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் இஸ்லாம் தொடர்பான அமைதி மற்றும் சமத்துவம் தொடர்பான போதனைகளை கேட்ட பிறகு இஸ்லாம் தொடர்பான எனது கருத்துக்கள் முற்றிலுமாக மாறிவிட்டன என்று எழுதியுள்ளார். (அல் ∴பஸல் பத்திரிகையின் சுருக்கம், ஜனவரி 4, 2013)

Joz Naria Elinso Member Of Popular Party, Madrid, Spain என்பவர் மாண்புமிகு கலீ∴பா ஸாஹிப் மிகவும் மதிக்கப்படும் ஒரு நபர் என்றும், அன்னாரது தோற்றத்திலிருந்து அன்பு மற்றும் நேசத்தின் கதிர்கள் வெளிவருகின்றது என்று கூறுகிறார். (அல்∴பஸல் பத்திரிபையின் சுருக்கம், ஜனவரி 4, 2013)

இதே போன்று, அஹ்மதிய்யா ஜமாஅத்தினுடைய இமாமின் அன்பு, அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு, பிரெஞ்சு பல்கலைக்-கழகத்தின் பேராசிரியர் மிஸ்டர் மார்கோ தியானி என்பவர் எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிகவும் மரியாதைக்குரிய இமாமின் தலைமையில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே நான் மிகவும் நற்பாக்கியசாலியாவேன். உண்மையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டக்கூடிய மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய ஒரு ஜமாஅத் மற்றும் ஒரு மகத்துவமான ஆன்மிக நபராக, மார்க்க சுதந்திரத்தை விரும்பக்கூடிய ஒரு மனிதனின் முன்னிலையில் இங்கு இருப்பது எனக்கு மிகுந்த கண்ணியத்தை அளிக்கின்றது. மேலும் இது அருளுக்குறிய விஷயமும் ஆகும். இறைவனின் மனிதனாக இருக்கின்ற எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ஒரு ஆன்மிக அடியானை சந்தித்தேன். அவர் அமைதி, பாதுகாப்பு மற்றும் பரஸ்பர அன்பை பரப்புவதற்கான பணியை செய்து வருகிறார். நீங்கள் ஒரு சிறந்த ஆன்மிக ஆளுமையுடையவர். எல்லாவற்றிற்கும் மேலாக உலகின் மிக சக்திவாய்ந்த முழக்கமான 'எல்லாரிடமும் அன்பு; எவரிடமும் இல்லை வெறுப்பு' என்ற முழக்கத்தைப் பரப்ப பாடுபடுகிறீர்கள். (அல் ∴பஸ்லின் சுருக்கம் ஜனவரி 4, 2013)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய ஐந்தாவது ஆன்மீக கலீ∴பா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், தனது ஜமாஅத்தினரை நோக்கி இவ்வாறு கூறுகிறார்கள்:

நாம் அன்பு மற்றும் நேசத்தின் விளக்கை உள்ளங்களில் ஏற்றக் கூடியவர்கள். இறைவன் என்னை உண்மையை வெளிப்-படுத்துவதுடன் மார்க்கப் போர்களை முடிவு பெறச் செய்து சமாதானத்தின் அடித்தளத்தை இட வேண்டும் என்பதற்காகவே அனுப்பி-யுள்ளான் என்று அறிவித்த அந்த முஹம்மதிய மஸீஹை நாம் ஏற்றுக் கொண்டவர்கள் ஆவோம். இந்த ஜமாஅத் தான் ஜமாஅத் என்ற அடிப்படையில் உலகில் அமைதியை பரப்பக்கூடிய ரீதியில் முன்வந்துள்ளது. இன்று நம்முடைய ஒவ்வொரு அஹ்மதியினுடைய முழக்கமாக அவர்கள் உள்ளங்களை இணைக்க கூடியவர்களாகவும் நேசங்களை பரப்பக் கூடியவர்களாகவும் இருப்பார்கள் என்பதாகவே இருக்க வேண்டும். மாறாக இதயத்தின் ஓசையாகவும் இதுவே இருக்க வேண்டும். இன்று முஹம்மதிய மஸீஹினுடைய ஜமாஅத்தினால் தான் இந்த பணியைச் செய்ய முடியும். (ஜுமுஆ பேருரையின் சுருக்கம் நவம்பர் 7 2008)

இஸ்லாம் மனிதநேயத்துடன் அன்பு மற்றும் நேசம் கொள்வதற்கான தூதுச் செய்தியை வழங்கியுள்ளது. அந்த நேசம் வீட்டிலிருந்து துவங்கியவாறு சமூகம் மற்றும் அக்கம் பக்கத்தினர் வரை சென்றடைகிறது. அதேபோன்று இஸ்லாம் அண்டை வீட்டாருடனும் அன்பு நேசம் மற்றும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று கட்டளை-யிட்டுள்ளது. மேலும் அத்துடன் இஸ்லாம் தன்னுடைய நாட்டுடனும் நேசம் கொள்வதற்கான போதனை வழங்கியுள்ளது. இஸ்லாத்தின் ஸ்தாபகர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும் என்று கூறியதாக ஹதீஸில் உள்ளது.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள், நாட்டின் மீது நேசம் கொள்வது தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்: முழுமையான நம்பிக்கை (விசுவாசம்) என்பது ஒரு உயர் படித்தரத்தின் பண்பாகும். மேலும் எவர்கள் இந்த பண்பினுடைய உயர்தரத்தை வெளிப்படுத்தினார்களோ அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் தூதர்கள் ஆவார்கள். அல்லாஹ்வுடன் அவர்களின் நேசம் மற்றும் அன்பினுடைய தொடர்பானது எந்த அளவிற்கு உறுதியானதாக இருந்தது என்றால் அவர்கள் எல்லா நிலையிலும் அல்லாஹ்வினுடைய கட்டளைகளின் படியே செயல்பட்டு வந்தார்கள் நிலைமை எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரியே. அவர்கள் முழுமையான முறையில் அல்லாஹ்வினுடைய போதனைகளின்படி நடப்பதற்கு அவர்களால் முடிந்தவரை முயற்சி செய்தார்கள். அவர்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதிக்கு ஏற்ப நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள். இதனால் தான் அவர்களின் இந்த முழுமையான நம்பிக்கை, பற்றுறுதியின் விதிமுறைகள் மற்றும் கொள்கைகள் எப்போதும் நமக்கான ஒரு முன்மாதிரியாக இருக்கின்றது. அதை நாம் ஏற்றுக் கொண்டு பின்பற்ற வேண்டும்.

அன்னார் மேலும் கூறுகிறார்கள்: ஒரு மனிதனுடைய சொல் மற்றும் செயலில் எந்தவிதமான வேறுபாடும் இருக்கக் கூடாது என்பது இஸ்லாத்தினுடைய அடிப்படை விஷயமாகும். ஒரு நாட்டினுடைய குடிமகனுக்கு தன்னுடைய நாட்டுடன் அன்பு நேசம் மற்றும் பற்றை நிலை பெறச் செய்ய வேண்டும் என்பது மிகவும் அவசியமானதாகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது ஸாஹிப் காதியானீ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறுகிறார்கள்:

நான் அனைத்து முஸ்லிம்கள், கிறித்தவர்கள், ஹிந்துக்கள் மற்றும் ஆரியர்கள் ஆகியவர்களிடம் உலகில் எனக்கு எந்த ஓர் எதிரியும் இல்லை என்ற விஷயத்தை தெளிவுபடுத்துகின்றேன். ஒரு கருணையுள்ள தாய் தன்னுடைய குழந்தைகளுடன் எவ்வாறு நேசம் கொள்கிறாளோ அதை விட அதிகமாக நாம் மனித குலத்தை நேசிக்கின்றேன். உண்மை அழிக்கப்படுகின்ற அத்தகு பொய்யான கொள்கைகளுக்கு நான் எதிரி ஆவேன். மனித குலத்தை நேசிப்பதும் அத்துடன் இரக்கம் காட்டுவதும் என்னுடைய கடமையாகும். பொய் கொடுமை அநீதி மற்றும் ஒவ்வொரு தீய செயல்களை வெறுப்பதே என்னுடைய கொள்கையாகும். (அர்பயீன்)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய ஐந்தாவது ஆன்மீக கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நம்முடைய இந்த வெளிப்படையான மரங்களுடன் அன்பு என்ற மரமும் உள்ளன நாம் எப்படிப்பட்ட மரத்தை நட விரும்புகிறோம் என்றால் அந்த மரம் எங்கு வெளிப்படையான உலகச் சூழலை அழகாக்குகின்றதோ அங்கு சமூகத்தையும் தூய்மை செய்வதுடன் அன்பு மற்றும் நேசத்தின் கனிகளை தரக்கூடியதாக இருக்க வேண்டும். மேலும் நம்முடைய அண்டை வீட்டாருடன் மிக்க நேசம் கொள்ள வேண்டும். நாம் உலகில் எல்லா இடத்திலும் பயங்கரவாதம் அடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும். மேலும் உலகம் ஒருவர் மற்றவருடன் பகைமை மற்றும் வேறுபாட்டை மேற்கொள்வதற்கு பகரமாக அன்பு மற்றும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதையே நாம் மனதார விரும்புகின்றோம். (உரை; ஏப்ரல் 11 2017)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இரண்டாவது ஆன்மீக கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் மனிதநேயத்துடன் கொண்ட தன்னுடைய அன்பை வெளிப்படுத்தியவாறு கூறுகிறார்கள்:

“நான் என்ன விரும்புகிறேன் என்று உங்களுக்கு கூறட்டுமா? நானோ அடியான். நான் வேண்டுவது இறைவனை! எனக்கு உலகில் எவரிடமும் ஒருபோதும் பகைமை இல்லை. நான் உலகில் அனைவருக்காகவும் நன்மையையே நாடுகின்றேன்.”

அதாவது மக்களே நான் உங்களுக்கு என்ன விரும்புகிறேன் என்பதை கூறட்டுமா? நான் ஒரு மனிதன். எனக்கு என்னுடைய இறைவன் கிடைத்துவிட வேண்டும் என்பதையே விரும்புகின்றேன். எனக்கு உலகில் எவருடனும் பகை இல்லை நான் உலகில் வாழ்கின்ற அனைத்து மனிதர்களையும் நேசிக்கின்றேன். மேலும் அவர்களுக்கு நல்லதையே விரும்புகின்றேன்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய ஐந்தாவது ஆன்மீக கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: எந்த மார்க்கம் உலகில் அமைதி நேசம் அன்பு மற்றும் சமத்துவத்தையும் மதநல்லிணக்கத்தையும் நிலை பெறச் செய்வதற்காக பாடுபடுமோ நாம் அவர்களுடன் இருப்போம். (அல் ஃபஸல் நாளிதழ் நம்பர் 7 2008 பக்கம் 11)




இன்று நாம் அனைவரும் நம்மில் ஒவ்வொருவருடைய முழக்கமாகவும் ‘எல்லாரிடமும் அன்பு; எவரிடமும் இல்லை வெறுப்பு’ (Love For All Hatred For None) என்பதாகவே இருக்க வேண்டும் என்ற உறுதிமொழியை எடுப்போம். (அல் ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிகை நவம்பர் 7, 2008 பக்கம் 11)




# அணு ஆயுதப் போரின் அச்சுறுத்தல்

தமிழில்:
A. நாஸிர் அஹ்மத்

மற்றொரு நாட்டில் அமைதிக்காக உழைப்பது என்பது அண்டை வீட்டாரின் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவது போலாகும் எனப் பலர் கருதுகின்றனர். அது உயர்ந்த செயல் என்றாலும் தேவையற்றதும், நம் வாழ்க்கையுடன் சம்பந்தமற்றதுமாக அவர்கள் கருதுகின்றனர். “நமக்கு நம் வீட்டிலேயே கணிசமான பிரச்சினைகள் இருக்கின்றன. பிற இடங்களில் நடக்கும் மோதல்களைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?” என்று மக்கள் அடிக்கடி கேட்கிறார்கள்.

பரஸ்பர தொடர்புகள் மிகுந்த இன்றைய உலகில், இந்த எண்ணம் மிகவும் தவறானது. மோதலும் அநீதியும் தேசிய எல்லைகளுக்குள் மட்டும் கட்டுக்குள் இருப்பதில்லை. உலகின் ஒரு பகுதியில் ஏற்படும் போர், மற்ற பகுதிகளிலும் விரைவாக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எரிசக்தி விலை உயர்வு, பொருளாதார நிலை தடுமாற்றம், அகதிகள் நகர்வு, உணவு பாதுகாப்பு குறைவு, காலநிலை மாற்றம் மற்றும் உலக அரசியல் ஸ்திரத்தன்மையின்மை போன்றவையாக வெளிப்படு-கிறது. அமைதி என்பது ஒரு பிராந்திய விஷயம் அல்ல; அது உலகளாவிய பொறுப்பு ஆகும்.

உலகம் தற்போது பனிப்போர் காலத்திற்குப் பிறகு மிகவும் ஆபத்தான காலகட்டங்களில் ஒன்றை எதிர்கொள்கிறது. முக்கிய சக்திகளுக்கிடையிலான அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் படிப்படியாக கலைந்து வருவதால், பேரழிவான மோதலின் அபாயம் அதிகரித்துள்ளது. அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான கடைசி முக்கிய அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமும் காலாவதியானதால், மனிதகுலம் மிகப்பெரிய அணு ஆயுதங்களுக்கு சட்டபூர்வமான கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு காலத்திற்குள் நுழைந்துள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் வெறும் எண்ணிக்கைகளை குறைப்பதற்காக மட்டுமல்ல. அவை வெளிப்படைத்-தன்மை, முன்கூட்டிய கணிப்பு மற்றும் தொடர்பை உறுதி செய்தன. அவை இல்லாதபோது, உறுதியின்மை உருவாகிறது. அணு ஆயுதங்களின் சூழலில் இந்த உறுதியின்மை மிகவும் ஆபத்தானது. அணு ஆயுதப் போர் என்பது சாதாரண போர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அதன் விளைவுகள் நகரங்கள் அழிவதோடு அல்லது உடனடி உயிரிழப்புகளோடு முடிவதில்லை.

கதிர்வீச்சு நிலம், நீர், காற்றை மாசுபடுத்தி, பரந்த பகுதிகளை தலைமுறைகள் கடந்தும் வாழ முடியாதவையாக மாற்றும். விவசாய அமைப்புகள் சிதைந்து, உணவுச் சங்கிலிகள் பாதிக்கப்படுகின்றன. நீண்டகால சுகாதாரப் பிரச்சினைகள் உருவாகின்றன. மோதல் பகுதிகளிலிருந்து தொலைவில் இருக்கும் பகுதிகளும் சுற்றுச்சூழல் சேதம், பொருளாதார அதிர்வுகள் மற்றும் உலகளாவிய நிலைதடுமாற்றம் மூலம் பாதிக்கப்படுகின்றன. அணு ஆயதப் போரின் மிகக் கவலைக்கிடமான விளைவு மனிதகுலத்தின் எதிர்காலத்திற்கான தாக்கமே ஆகும். கதிர்வீச்சு மரபணுக்களை சேதப்படுத்தி, பல ஆண்டுகள் கழித்து

பிறக்கும் குழந்தைகளில் கடுமையான உடல் மற்றும் வளர்ச்சி குறைபாடுகளுக்கான வாய்ப்பை அதிகரிக்கிறது.

இந்த தார்மீகமான பொறுப்பை சிந்தித்து, ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்:

"நமது சந்ததிகளும் எதிர்கால தலைமுறைகளும் நம்மைப் பாசத்துடன் நினைவு கூர வேண்டும் என்று நாம் விரும்பினால், அவர்களை உடல் மற்றும் மன ரீதியான குறைபாடுகளுடனும் ஊனங்களுடனும் நாம் விட்டுச் சென்று விட்டோம் என்று நம்மீது கோபப்படாமல் இருக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், நான் கூறிய நீதியின் தரங்களுக்கு ஏற்ப நாம் செயல்பட வேண்டும். அதை நாம் செய்ய தவறினால், மறைந்து கொள்வதற்கோ அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளவோ எந்த இடமும் இருக்காது.

நான் 'குறைபாடுகள்' என்ற சொல்லை எதிர்கால தலைமுறைகளுக்குச் நாம் விட்டுச் செல்லும் மரபணு குறைபாட்டைக் குறிக்க பயன்படுத்தினேன். ஏனெனில், உலகப் போர் ஏற்பட்டால் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் வாய்ப்பு மிகவும் அதிகம். அணு ஆயுதப் போரின் விளைவுகள் நம் கற்பனைக்கு அப்பாற்பட்டவை; அவை தலைமுறைகள் கடந்தும் நீடிக்கும்.

எனவே, நான் கூறிய நீதியின் தரம் அனைத்து மக்களாலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். முஸ்லிம்களால் மட்டுமல்ல, முஸ்லிமல்லாதவர்களாலும், அனைத்து நாடுகளாலும். அணு ஆயுதப் போரின் விளைவுகளிலிருந்து யாரும் தப்ப முடியாது. அதன் அழிவுப் பாதை கட்டுப்படுத்த முடியாதது. கிழக்கினரும் மேற்கினரும் அனைவரும் பாதிக்கப்படுவார்கள்."

இந்த உண்மைகள் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியை நாடும் அனைத்து சமூகங்களையும் ஆழமாக கவலைப்படுத்த வேண்டும். உலகளாவிய அணு ஆயுத மோதல் பொருளாதாரங்களை சிதைக்கவும், உணவு அமைப்புகளை பாதிக்கவும், காலநிலை மாற்றங்களை ஏற்படுத்தவும், உலகளாவிய சுகாதார அமைப்புகளை சீர்குலைக்கவும் செய்யும். இத்தகைய பேரழிவின் சுமை, மோதலில் நேரடியாக ஈடுபடாதவர்களாக இருந்தாலும், பலவீனமான மக்கள்மீதே அதிகமாக விழும்.

இந்த பிரச்சினைக்கு ஆழமான தார்மீக பரிமாணமும் உள்ளது. தார்மீகப் பொறுப்பேற்காத அறிவியல் முன்னேற்றம், நன்மையானது அல்ல. அது ஆபத்தாக மாறுகிறது. பாதுகாப்பு என்ற பெயரில் உருவாக்கப்பட்ட ஆயுதங்கள் இன்று நாகரிகத்தின் உயிர் வாழ்வையே அச்சுறுத்துகின்றன. அணு ஆயுதப் போரின் மனித பலியின் எண்ணிக்கையை தலைவர்கள் உணர்ந்தபோதுதான் ஆயுதக் கட்டுப்பாட்டில் உண்மையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை வரலாறு காட்டுகிறது."



இந்த நிலையில், ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேலும் கூறியுள்ளார்கள்:

"உலகப் போர் என்பது இன்றைய நாகரிகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். இது உண்மையான அபாயம் ஆகும். அதைத் தடுக்க நாம் நீதி மற்றும் சமநிலையுடன் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்."

அணு ஆயுதப் பேரழிவைத் தடுக்க சர்வதேச உறவுகளில் நீதி, போட்டி நாடுகளுக்கிடையிலான உண்மையான உரையாடல் மற்றும் குறுகிய தேசிய நலன்களுக்கு மேல் மனிதகுலத்தை வைக்கும் மனப்பாங்கு அவசியம். கட்டுப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒத்துழைப்பு ஆகியவை இனி கனவுகளல்ல. அவை அவசரத் தேவைகள் ஆகும்.

அமைதி, பயத்தின் மூலம் நிலைத்திருக்காது அது நீதி, நம்பிக்கை மற்றும் ஒழுக்கத் தெளிவின் மூலம் மட்டுமே நிலைத்திருக்கும். இன்றைய தலைமுறை பொறுப்புடன் செயல்படத் தவறினால், எதிர்கால தலைமுறைகள் மனிதகுலத்தை அதன் தொழில்நுட்ப சாதனைகள் அல்லது அரசியல் வலிமையால் மதிப்பிட மாட்டார்கள். அவர்களுக்கு விட்டுச் செல்லப்பட்ட குறைபாடான வாழ்க்கையையே அவர்கள் தீர்ப்பாகக் காண்பார்கள்."

(அல்ஹகம் ஏப்ரல் 2026)

# பராஹீனே அஹ்மதிய்யா

7

பாகம் 2
தொகுதி 1

தமிழாக்கம்:
ஜோதி அருள்குமார் ஆஸ்டின்

سَاُورِيۡكُمۡ اٰيٰتِىۡ فَلَا تَسۡتَعۡجِلُوۡنِ

நிச்சயமாக நாம் உங்களுக்கு என் அடையாளங்களைக் காட்டுவேன். எனவே நீங்கள் அவசரப்படாதீர்கள். (சூரா அல்அன்பியா 21:38)

## பராஹீனே அஹ்மதிய்யாவை எதிர்ப்பவர்களின் அவசரகதியான பதில்

அநேக கிறிஸ்தவ மிஷனரிகளும் ஹிந்து பிரமுகர்களும், சற்று அவசரகதியிலேயே இந்த நூலை எதிர்த்து பதிலளிப்போம் என்று கூறியுள்ளனர்.

'ச.ஃபரெ ஹிந்து, நூர் அக்ஷானா ஆகிய தினசரி பத்திரிகைகள், மற்றும் 'வித்யா பிரகாஷ்' எனும் இதழிலும் வெளியிடப்பட்டுள்ளபடி தங்களது அறிவிப்புகளில் அவர்கள் பயன்படுத்தியுள்ள இழிவான மொழியானது, நாகரிகம் அற்ற நடைமுறையில், அவர்களது தீய நடத்தை மற்றும் அவர்களின் இயல்பிலேயே இருக்கக்கூடிய சீரின்மையையும் வெளிக் காட்டுகின்றது.

அவர்களது செய்கைகளைக் காணும்போது ஏதோ அவர்களது எச்சரிக்கைகள் மற்றும் அவர்களது நாகரிகமற்ற வார்த்தைகள் மூலம் என்னை பயம் காட்ட முடியும் என்ற கனவில் அவர்கள் முயற்சி செய்வது போலத் தோன்றுகின்றது. அவர்களைப் பற்றி நான் நன்கு அறிவேன் என்பதும் அவர்களின் பழிவாங்கும் குணமும் அவர்களது சிந்தையின் அடாவடித்தனங்களும் எனக்கு தெரியாத இரகசியம் ஒன்றுமில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே நான் அவர்களுக்கு பயப்படுவதும் இல்லை. அவர்களால் என்னை ஒருகாலும் மிரட்டவும் முடியாது.

کرمک پروانہ راچوں موت می آید فراز     می فتد بر شمع سوزاں از رہِ شوخی و ناز

*மரணத்தைத் தழுவும் நிலையிலான சாதாரண விட்டில்பூச்சி பெருமையோடும் ஆக்ரோஷத்தோடும் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பைத் தாக்கி விட முற்படுகிறது.*

நான் அவர்களைக் கேட்டுக் கொள்வ-தெல்லாம் இந்நூலின் சில பகுதிகளை வெளியிடும் வரை பொறுமையுடன் இருங்கள் என்பதே. அதன் பின்பு அவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் விரும்பும் அளவிற்கு விமர்சனம் செய்யலாம். அவர்களுக்கு சுதந்திரம் உண்டு. ஒரு பொதுவான பழமொழி இருக்கின்றது - சத்தியம் எதற்கும் பயப்படுவதில்லை.

இவ்விஷயத்தில் நான் சத்தியத்தின் பக்கம் இருக்கின்றேன். கிறிஸ்தவ மிஷனரி-களோ இந்து மத பண்டிதர்களோ எனக்கு எதிராக நின்று வெற்றி பெற இயலாது. மேலும் அவர்களாக தங்களுடைய அறிவற்ற பெருமைகளைக் கொண்டு எனக்கு தீங்கிழைக்கவும் இயலாது. அதிகபட்சம் அவர்களுடைய மூர்க்கத்தனமான செயல்பாடுகள் அவர்களின் உண்மையற்ற தீய நோக்கத்தையே வெளிப்படுத்துகின்றது. இதுவரையில் அவர்கள் இந்நூலினைப் படிக்கவில்லை. மேலும் இதில் எடுத்து வைக்கப்பட்டுள்ள வாதங்களை இன்னும் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். மேலும் இந்நூலில் அடிப்படையாகக் கொண்டுள்ள ஆராய்ச்சியின் தரத்தையும் அறியாமலேயே இருக்கின்றனர். இருந்தும் எனது நூலில் உள்ள சான்றுகள் மற்றும் வாதங்களை மறுக்கக் கூடிய அளவிற்குப் போதுமான துணிச்சல் கொண்டுள்ளனர். இதுவே அவர்களது உண்மை மற்றும் நேர்மையின் நிலைமை.

கனவான்களே! எனது வாதங்களை முழுவதும் வாசிக்காமலேயே அவற்றை எதிர்க்க முடியும் என்று எவ்வாறு நீங்கள் கூறுகிறீர்கள்? இது ஒரு குருட்டுத்தனமான பாரபட்சமான செயல் ஆகும். இது உங்களை, எனது வாதங்களை எளிதாக மறுத்து விடலாம் என்றும் எனது வாதங்கள் அர்த்தமற்றது என்றும் கண்டனங்களை தெரிவிக்கக்கூடிய நிலைக்கு எடுத்துச் செல்லும்.

ஏனெனில் நான் முன் வைத்துள்ள வாதங்கள் மற்றும் சான்றுகள் அனைத்தும் அறிவுப்பூர்வமானவையா அல்லது போலியானவையா என்று நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை. மேலும் உறுதியான அடிப்படைகளைச் சார்ந்து அவ்வாதங்கள் உண்மையானவையா அல்லது பொய்யானவையா என்பதையும் நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை. நீங்கள் ஏற்கனவே எனது வாதங்களை, அவைகளின் சிறப்புத் தன்மையை ஆராய்ந்து பார்க்காமல் அவைகளை மறுக்கும்படி முடிவெடுத்து விட்டால் நாங்கள் வெற்றிகரமாக சவாலை எதிர் கொண்டு பதில் அளித்து விட்டோம் என பெருமை அடித்துக் கொள்ளும்படி உங்களது ந.ஃப்ஸே அம்மாரா (தீமையைத் தூண்டக்கூடிய ஆன்மா)

உங்களை ஏமாற்றி நயவஞ்சகம், நாணயமின்மை மற்றும் உண்மையின்மையின்பால் உங்களைத் தூண்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கின்றது?

உங்களது நோக்கங்கள் நேர்மையுடனும் உண்மையுட-னும் இருக்குமாயின், ஏதாவது ஒரு வாதம் உங்களுக்கு எதிராக, உண்மையான முறையில், திரும்பும்போது அதை நீங்கள் சந்தோஷமாக ஒத்துக் கொண்டீர்கள் அல்லது உண்மையை வெளிக்கொண்டு வரும்படியாக எதிர்ப்பைப் பதிவிடுவீர்கள் எனில் நீங்கள் நேர்மையானவர்கள் எனவும், நியாய உணர்வுள்ளவர்கள் பார்வையில், நீங்கள் மனசாட்சியுள்ளவர்களாகவும் கருதப்படுவீர்கள்.

அந்தோ! இறைவனுக்கு எதிராக வேகமாக அநீதி இழைப்பவர்களை நீதியாளர்கள் என்றோ அல்லது நியாய உணர்வுள்ளவர்கள் என்றோ எவ்வாறு கருத முடியும்? அவர்களின் சிலர் இறைவன் படைப்பாளி என்பதை மறுக்கின்றனர். அவர்களின் மேலும் சிலர் ஏக இறைவனை மூவராக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்களில் மேலும் சிலர் இறைவன் ஒரு காலத்தில் நாசரேத்தில் வசித்தார் என்றும் வேறு சிலர் அவர் அயோத்தியில் வசித்தார் என்றும் நம்புகின்றனர்.

சுருங்கக்கூறின், எந்தத் தயக்கமும் தாமதமும் இன்றி எனது அறைகூவலை மேற்கொள்ள இறைவனின் பெயரால் நான் உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன். பிளாட்டோ போல் வாதிடுங்கள். பேக்கனுக்கு மறுபிறவி எடுங்கள். அரிஸ்டாட்டிலிடம் அறிவையும், மொழியையும் கடன் வாங்குங்கள். உங்களது பொய்த் தெய்வங்களின் முன்பு கைகூப்பி அவர்களிடம் உதவி கோருங்கள்.

அப்போது மிகைத்திருக்கக்கூடியது எனது இறைவனா அல்லது உங்களது பொய்த்தெய்வங்களா என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். எனது நூலுக்கு நீங்கள் பதில் எழுதும் காலம் வரை பொதுவெளியில் இஸ்லாத்தை தொடர்ந்து தாக்குவது அல்லது இந்து கோவில்களில் இந்து வேதங்கள் மட்டுமே இறைவன் புறத்திலிருந்து வந்துள்ளது என்றும் அதுவே உண்மையான அறிவைப் பெறும் இடம் என்றும் மற்ற எல்லா இறைத்தூதர்களும் போலியானவர்கள் மற்றும் பொய்யர்கள் என்றும் உரை நிகழ்த்துவது உங்கள் பங்கில் வெட்கக்கேடானதும் நாகரிகமற்றதும் ஆகும்.

یارو خودی سے باز بھی آوَ گے یا نہیں؟ خُو اپنی پاک صاف بناوَ گے یا نہیں؟

நண்பர்களே! உங்களது அகங்காரத்திலிருந்து விலகுவீர்களா இல்லையா? உங்களை நீங்கள் தூய்மைப்படுத்த மாட்டீர்களா?

باطل سے میل دل کی ہٹاوَ گے یا نہیں؟ حق کی طرف رجوع بھی لاوَ گے یا نہیں؟

பொய் எனும் அசுத்தங்களில் இருந்து உங்களை நீங்கள் தூய்மையாக்கிக் கொள்ள மாட்டீர்களா இல்லையா? உண்மையின் பக்கம் குனிவீர்களா இல்லையா?

کب تک رہو گے ضد و تعصب میں ڈوبتے؟ آخر قدم بصدق اٹھاوَ گے یا نہیں؟

எவ்வளவு காலம்தான் நீங்கள் பிடிவாதத்திலும் தப்பெண்ணத்திலும் காழ்ப்புணர்ச்சியிலும் மூழ்கி இருப்பீர்கள்? இறுதியில் உண்மையின் பாதையில் செல்வீர்களா மாட்டீர்களா?

کیونکر کرو گے ردّ جو محقق ہے ایک بات؟ کچھ ہوش کر کے عذر سناوَ گے یا نہیں؟

உண்மையானதாக இருக்கும் பொருட்டு நிலைநாட்டப்-பட்டதை நீங்கள் எவ்வாறு மறுக்கக்கூடும்? எந்தக் காரணமும் இன்றி உங்கள் சாக்குப்போக்குகளில் எவ்வாறு நீங்கள் தொடர முடியும்?

سچ سچ کہو اگر نہ بنا تم سے کچھ جواب
پھر بھی یہ منہ جہاں کو دکھاوَ گے یا نہیں؟

உண்மையைக் கூறுங்கள். நீங்கள் பதில் அளிக்கத் தவறினால் பிறகும் கூட உங்கள் முகத்தை வெளியில் காட்டுவீர்களா மாட்டீர்களா?




## ஒரு முக்கிய அறிவிப்பு

பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலின் விலையானது முஸ்லிம்களுக்கு ரூபாய் பத்து மட்டும் என விலை குறைப்பு செய்யப்படுகின்றது. ஏனெனில் முஸ்லிம்கள் தங்களது நம்பிக்கை சார்ந்த பணிகளுக்கு பொருளாதார உதவி நல்க அவர்களிடம் போதுமான பணவசதி இருக்கும் பட்சத்தில் ஒருபோதும் தாமதிப்பது இல்லை. எனினும் மற்ற மார்க்கங்களைச் சேர்ந்தவர்கள் இந்நூலை வாங்க விரும்பினால் பாகம் ஒன்றில் காணக் கூடிய அறிவிப்பின்படி முழு விலை வசூலிக்கப்படும். ஏனெனில் மாற்று சமயத்தவர்களிடம் இருந்து வேறு ஏதேனும் சேவையோ உதவியோ எதிர்பார்க்கப்-படவில்லை.

அறிவிப்பவர்
ஆசிரியர்
பராஹீனே அஹ்மதிய்யா

(தொடரும்...)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam